with the retired Superintending Engineer Mr. Ayyadurai Iyer who had prepared a big scheme in this connection. The Rajah Saheb also seemed to have said on that occasion that by diverting the waters from the Coorg basin into the Cauvery it would not be possible to take them up to Tirunelveli. If that is not possible, let some other scheme for Tirunelveli district may be drawn up. If only they do these things, there will be no Rayalaseema in Tamilnad. I must also congratulate the Hon. the Minister for Electricity on the successful manner in which he has been carrying on negotiations with the Government of Travancore and Cochin.

"I am not accustomed in specifying grievances of particular areas or individual cases. Still I wish to point out the grievances of the people of Tirupattur taluk with regard to the supply of electricity. This question has been delayed for a long time. I have been reminding the Superintending Engineer at Madurai—I think he is called Superintending Engineer, Papanasam—to bring Tirupattur taluk also under the Grid. There is a big Kshettram-Pranmalai in that area. As a big irrigation project cannot be started in that area, it is essential that that area must be supplied with electricity so that irrigation with the help of electricity may be taken up. I am very happy to see that one and the same Minister is in charge of both Irrigation and Electricity. It has been the same case from the days of Sir C. P. Ramaswami Ayyar. I trust the Hon. the Minister will take up this question of supplying electricity to these backward areas. These areas have not had the benefit of Community Projects and National Extension Schemes. That is all the more reason, Sir, why electricity should be supplied to these areas. I am happy that Hon. Sri M. Bhaktavatsalam who was in charge of Irrigation and Electricity previously is also by the side of Sri Raja Saheb. I would urge on the Minister to see that areas like Tiruvadanai, Paramakudi, Sivaganga, Ramanathapuram, etc., are supplied with electricity. I may assure the Minister that I am not adopting a parochial attitude when I plead for the cause of these areas. I would once again urge the Minister to give electricity to areas where there are no Community Projects and National Extension Schemes, and where also big irrigation schemes cannot be taken up."

SRI A. GOVINDASWAMY NAYAGAR :—" கனம் சபா நாயகர் அவர்களே, சென்ற ஆண்டு மின்சார மானியத்தின்மீது பதில் சொல்லும்போது கனம் மராமத்து மந்திரி அவர்கள் பேசும்போது அவர்களே தொடர்ந்து மந்திரியாக இருந்து இதே இலாகாவின் நிர்வாகப் பொறுப்பு கிடைக்குமானால், ஏழை விவசாயிகளுடைய நன்மைக்காக, இலவசமாக, அதாவது குறைந்த செலவில், விவசாயிகள் மின்சாரத்தை அனுபவிக்க வழி செய்வதாகச் சொன்னார்கள். அந்த வாக்குறுதியை, கனம் மந்திரியார் அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். அவர் சொல்லி ஒரு ஆண்டு ஆகிவிட்டது. அவர் தொடர்ந்து அந்த இலாகாவை வைத்துக்கொண்டுதான் இருக்கிறார். கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு இன்னும் மின்சாரம் அவ்வளவாக விஸ்தரிக்கப்படவில்லை. பொறுப்புடன் நடக்கும் மந்திரியாக இருப்பதால், ஏழைகள் கிராம மக்கள் விவசாயம் செய்வதிலுள்ள கஷ்டங்களை மின்சாரம் தீர்க்கமுடியுமாதலால், இதை வற்புறுத்தி சொல்லவேண்டியதாக இருக்கிறது. விவசாயி

16th March 1955] [Sri A. Govindaswamy Nagayar]

களுடைய நன்மைக்காக மின்சாரத்தை விநியோகிக்காவிட்டால், பிற்போக்காக உள்ள பிரதேசங்களில், கிணறு வெட்டி விவசாயம் செய்து வாழும் விவசாயிகளுடைய வாழ்க்கை செம்மை அடையாது. இந்த மின்சாரத்தின் மூலம் அவர்களுக்கு நல்ல முறையில் உதவி செய்தால், விவசாயம் நல்ல பலனைத் தந்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர ஏதுவாகும். ஆகவே எங்களுடைய பிற்போக்கான ஜில்லாவாகிய தென் ஆற்காடு ஜில்லாவில், எல்லாப் பகுதிகளுக்கும் மின்சார வசதிகள் விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதுவும், என்னுடைய தொகுதி—விக்ரவாண்டி, கஞ்சனூர், கரணை பிர்க்காக்களில் மின்சார வசதிகள் இல்லாமலிருக்கின்றது. தற்போது அநேகமாக, பணக்காரர்களுக்கும், மோட்டார் வைத்திருக்கும் பெரிய மனிதர்களுக்கும்தான் மின்சாரம் சுலபமாகக் கிடைக்கிறது. ரோடரி கிளப்பில் மெம்பர்களாக இருப்பவர்களுக்கும் சுலபத்தில் மின்சார வசதி கிடைத்துவிடுகிறது. ரோடரி கிளப்பில் காரியதரிசியாக இருப்பவர் மின்சார இலாகாவைச் சேர்ந்த இன்ஜினீர் ஆவர். ஆகவே, அந்த கிளப்பைச் சேர்ந்த அவருடைய நண்பர்கள் வேண்டியவுடன் மின்சார வசதி செய்து தரப்படுகிறது. ஏழைகளுக்கு அந்தவிதமான வசதி கிடைப்பதில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் ஸ்ரீ நாகராஜன் அவர்கள் விரிவாக எங்கள் ஜில்லாவைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். இருந்தாலும், விக்கிரவாண்டி கள்ளக்குறிச்சி பகுதிகளைப் பற்றி அவர் பேசவில்லை. அப்பகுதிகளைப்பற்றி என்னைப் போன்றவர்கள் பேசவேண்டுமென்று விட்டு விட்டார்போல் தோன்றுகிறது. இந்த பகுதிகளும் மிகவும் பிற்போக்காக இருப்பதால் இங்கும் நல்ல மின்சார வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தென் ஆற்காடு ஜில்லாவில் ஒரு தனிப்பட்ட கம்பெனிதான் **South Arcot Electricity Distribution Company** மின்சார விநியோகம் செய்துகொண்டிருக்கிறது. அக்கம்பனியில் நிறைய ஊழல்கள் இருக்கின்றன. இதுபற்றி கனம் மந்திரியார் அவர்களுக்கும் தெரிந்திருக்கும். ஏழைகள் மின்சாரம் வேண்டுமென்று கேட்டால் ஒரு பம்பு செட்டுக்காக மின்சாரம் கேட்டாலும், நாலாயிரம் ஐயாயிரம் ரூபாய் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். இவர்கள் இப்படி பணம் கேட்பதால், ஏழை விவசாயிகள் மின்சாரம் என்ற விஷயத்தையே மறந்துவிட வேண்டியதாக இருக்கிறது. விஷயமறிந்தவர்கள், மின்சார வசதி வேண்டுமென்று கேட்டால், மந்திரியைக் கேளுங்கள் அல்லது நீங்கள்தான் பட்டணம் போகிறீர்களே, அங்கு பெரிய இன்ஜினிரை கேளுங்கள் என்று பதில் சொல்லுகிறார்கள். ஆகவே இப்படி ஊழல் மயமான அந்த கம்பனியின் லைசன்சை ரத்து செய்துவிட்டு, சர்க்காரே அந்த கம்பனியின் பொறுப்பை ஏற்று நடத்தி மக்களுக்கு நல்ல முறையில் மின்சார வசதி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். விருத்தாசலம், திருக்கோயிலூர் பகுதிகளிலெல்லாம், சர்க்காரே மின்சார விநியோகம் செய்வதால், அங்கு குறைந்த செலவில் விவசாயிகள் மின்சாரத்தை உபயோகப்படுத்தி நன்மை அடைகிறார்கள். ஆகவேதான், விவசாயிகள் நன்மை அடைய, தனிப்பட்ட மின்சார கம்பனிகளை சர்க்கார் எடுத்து தேசீய மயமாக்கி நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள் பக்கத்திலேயே இருக்கிறார்கள். அவர்களைத் தூண்டிவிட்டால், இக்காரியம் சீக்கிரத்தில் வெகு சுலபமாக கைகூடுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். நெய்வேலி திட்டத்தை மின்சார உற்பத்தி செய்வதற்காக துரிதப்படுத்த வேண்டுமென்றும், அதற்கான வேலைகளை சீக்கிரமே செய்யும்படியும், அவரை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"எனக்கு முன்னால் பேசிய ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களுக்கு இந்த மந்திரி சபையில் கொஞ்சம் இடங்கொடுக்கவேண்டும். அவர்தான் மத்திய சர்க்காருடன் சண்டைபோட தகுதியானவர். அடிக்கடி பேசும்போது எல்லாம் மத்திய சர்க்கார் கொடுத்திருக்கும் தொகை போதாது, மறுபடியும் மத்திய சர்க்காரிடம் அதிகப் பணம் வாங்க சண்டை போட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆகவே அவர்கள் அப்படி சண்டை போட்டு பணம் வாங்கிவரும் வரையிலாவது இங்கு ஒரு மந்திரியாக இருக்கவேண்டும். அது முடியாவிட்டால், இந்த சர்க்காரின்

சார்பாக அவரை தூதுகோஷ்டியாகவாவது அனுப்பி, மத்திய சர்க்காரிடம் பணம் அதிகமாக வாங்கி வரும்படியான ஏற்பாடு செய்யவேண்டும். ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் நேரு அவர்களிடம் போய் சண்டை போட்டு பணம் அதிகமாக நமக்கு வாங்கி வருவார்கள். மத்திய சர்க்காரிடம் பிச்சை கேட்கும் நிலைமை மாறி, உரிமையுடன் பணம் கேட்கும் நிலைமை வரவேண்டும். தொழிலை தேசீய மயமாக்குவோம், சோஷியலிச மாதிரியான சமூகத்தை உண்டாக்குவோம் என்று ஆவடி காங்கிரஸில் தீர்மானம் போட்டால் மட்டும் போதாது. அதை நடைமுறையில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"தென்னாடு தொழில் வளப்பத்தில் பிற்போக்காக இருக்கிறது. மின் சாரம் நல்ல முறையில் உபயோகிக்க கிடைக்குமானால், நெய்வேலி திட்டம் சீக்கிரம் நடைமுறைக்கு கொண்டுவரப்படுமானால், தென்னாட்டில் தொழில்வளம் பெருகவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்கவும், அனுகூலமாக இருக்குமென்று சொல்லிக்கொண்டு, மின்சார கம்பனிகளை தேசீய மயமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்வித காரியங்களை துரிதமாகச் செய்யவேண்டியதற்கு பணத்தை வாங்கிவர ராஜா சர் முத்தையா செட்டியாரை டெல்லிக்கு உடனடியாக அனுப்பவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்."

12-10 p.m. * DR. K. B. MENON :—" Mr. Speaker, Sir, production of electricity is of paramount importance to the Peninsular part of India. We have very litle of coal, etc. However nature has been generous and for the production of electric power and wind power we are ideally situated. Speaking of Malabar and her conditions, they are still more ideal. The Western Ghats are second only to the Himalayas; we have an average rainfall of 125 inches; again, speaking of the conditions in Malabar, her density of population, her lack of capital and development of major industries, I feel her future is inextricably interlinked with the development of cottage industries; and development of cottage industries is also very closely allied to the development of electric power. I am not very much concerned where these electric installations are built up, for, it is entirely a matter of cost and where it should be located the Government should decide in consultation with their experts in the line and also considering the physical factors. We are sandwiched between two great States, Mysore and Travancore-Cochin, both cheap elecricity producing areas. I believe that Barapool is between these two. That place is only 40 miles from Tellicherry. This is one of the best schemes that would help Malabar. I thing the cost of the scheme is very little, say, about 15 or 16 crores, with an avarage return of 7;7 per cent or somewhere about. I also believe that the cost of electricity will be very much less. These considerations induce me to suggest to the Government that the scheme should be considered immediately. In this connection, I would press upon the Government the appointment of a Committee which I suggested in connection with the Irrigation Demand, to explore the possibilities of both irrigation and hydro-electric power. Electricity is of paramount importance not only for development of cottage industries, but it is also important for agricultural purposes. For working pump sets, the capital investment as well as running cost will be reduced by one-third which is a great saving for the average cultivator.

16th March 1955] [Dr. K. B. Menon]

"As far as Malabar is concerned in the matter of electricity development, I think it is not very much. Only about 30 villages have been electrified and a number of villages, hundreds of villages, in Malabar can be very soon electrified if the Government would only hasten negotiations with the Travancore-Cochin Government; there the cost per unit is also very small, while in bringing power from Pykara the cost will be high. On an average, the cost of electricity in our State is fairly high. The Rajah Saheb of Chettinad has saved some of my breath in recommending nationalization of electric supply and also in demanding more loans from the Centre I am sure, that our Ministers will take care that more money is had from Delhi and that greater and speedier improvement is effected in the supply of electricity in the State."

Sri M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்திற்குப் பிரேரிக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துப் பேசுவதற்கு நான் நிற்கிறேன் என்று சொல்லத் தேவையில்லை. எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் எல்லோரும் நம் ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி மிக அதிகரித்தும்கூட, நம் ராஜ்யத்தின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு அபிவிருத்தி அடையவில்லை என்பதை சுட்டிக் காட்டினார்கள். பொதுவாக எந்தவகைத் தொழிலாக இருந்தாலும்கூட அதன் வளர்ச்சிக்கு மின்சார சக்தி அதிகம் தேவைப் படுகிறது. நாம் எல்லா ராஜ்யங்களையும் விட மிக அதிகமாக மின்சாரம் உற்பத்தி செய்கிறோம் என்று பெருமைப்பட்டுக்கொண்டால் மாத்திரம் போதாது. நம் ராஜ்யத்தின் தேவை என்ன, நம் ராஜ்ய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இன்னும் எப்படி எப்படி அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதையும் சர்க்கார் கவனிக்கவேண்டியது ரொம்பவும் அவசியமாகும் : அதுவும் விவசாய மக்களின் தேவையை நினைக்கிறபோது நாம் உற்பத்தி செய்கின்ற மின்சாரமானது போதவே போதாது. இன்னும் மிகமிக அதிகமாகத் தேவைப்படுகிறது. எந்தெந்த வகையில் தேவைப்படுகிற தென்று நான் விவரங்களைக் கூற விரும்பவில்லை. ஆனால் ராஜ்யத்தின் மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு சர்க்கார் இரண்டு விதத்தில் முயற்சி எடுத்துக்கொண்டாக வேண்டும். வெறும் நீர்விசை மின்சாரத்தை மாத்திரம் நம்பிக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. நீராவியை வைத்துக்கொண்டு மின்சாரத்தை அதிகம் உற்பத்தி செய்யக்கூடிய முறையையும் அதிகமாகக் கையாளவேண்டும். இந்த வகையில் சென்னை நகரத்திலும், மதுரையிலும் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் அவை மட்டும் போதாது.

" கனம் நிதி மந்திரி அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தில் கூறியிருப்பதுபோல பூமிக்குமேல் இருக்கக்கூடிய தண்ணீர் யாவையும் நாம் உபயோகப்படுத்திக் கொண்டுவிட்டோம். இனிமேல் பூமிக்குள் இருக்கும் தண்ணீரை தோண்டித்தான் உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆகவே நீர்விசை மின்சாரத்தை மட்டும் நம்பிப் பிரயோஜனமில்லை. அதுவும் முக்கியமாக நம்முடைய ராஜ்யத்திலுள்ள நதிகளில் வருஷம் பூராவும் தண்ணீர் இருப்பதும் கிடையாது. ஆகவே இருக்கக்கூடிய தண்ணீரையும் மின்விசைக்கு உபயோகப்படுத்திவிட்டால் விவசாயமும் பாதிக்கப் படும். அதனால் கூடுமானவரையில் நீராவி மூலமாக மின்விசைத் தயாரிப்பை எங்கு பார்த்தாலும் அமுலுக்குக் கொண்டுவருவதிலேயே சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும். நீராவி மூலமாக மின்விசை தயாரிப்பதானால் நிறைய நிலக்கரி வேண்டியிருக்கிறது. நம்முடைய நெய்வேலித் திட்டம் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டால் நமக்கு நிலக்கரி பஞ்சம் இருக்காது. ஆகவே இந்தச் சமயத்தில் நெய்வேலி திட்டத்தையும் ஜரூராக அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[Sri M. Kalyanasundaram] [16th March 1955

" கனம் அமைச்சர் அவர்கள் தன்னுடைய முதல் பிரசங்கத்தில் 'குண்டா' திட்டத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். நாம் போட உத்தேசித்திருக்கும் திட்டங்களில் அது ஒன்று. அதை நம்முடைய ராஜ்யத்தில் உடனடியாக அமைப்பது மிகவும் அவசியம் என்று நானும் கருதுகிறேன். ஆனால் ஒரே ராஜ்யத்தில் எல்லாத் திட்டங்களையும் அமைக்கவேண்டுமா என்று மத்திய சர்க்கார் யோசிக்கலாம். மற்ற எந்தத் திட்டங்களை வேண்டுமானாலும் மத்திய சர்க்கார் அமுலுக்குக் கொண்டுவரட்டும். அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் வேறு ஏதாவதொரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக இந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிடக் கூடாது என்பதை மத்திய சர்க்காருக்கு நம் சர்க்கார் வலியுறுத்துவது ரொம்பவும் அவசியமாகும். நம்முடைய திட்டத்தைப் பூர்த்திசெய்து கொடுத்து, நாம் இதர பிரதேசங்களுக்கு மின்சார உதவி செய்யவேண்டுமென்று மத்திய சர்க்கார் சொன்னால் அதை வேண்டுமானாலும் நம் சர்க்கார் ஆலோசிக்கலாம். ஆனால் அவ்வாறு சொல்லாது இந்தத்திட்டத்தை வேறு ஒரு ராஜ்யத்திலுள்ள திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகக் கைவிடப் போவதாக அவர்கள் சொன்னால் அதை இந்தச் சர்க்கார் ஒத்துக்கொள்ளக்கூடாது. அது சரியும் அல்ல. ஆகவே நம்முடைய ராஜ்யத் திட்டமான குண்டா ஸ்கீமை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்பதற்கு அதை இரண்டாவது ஐந்து வருஷ திட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் வலியுறுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

12-20 p.m. " அடுத்ததாக நான் முன்பே பல தடவைகளில் மின்சார வினியோகத்தில் இருக்கக்கூடிய பல குறைபாடுகளை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நான் மட்டுமல்ல. அவற்றைப் பல அங்கத்தினர்களும்கூட எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். செட்டி நாட்டு ராஜா அவர்களும் அதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். அவர் கூறியிருக்கிற வேறு விஷயங்களை நான் ஆதரிக்காவிட்டாலும், இவ்விஷயத்தில் அவரைப் பூர்ணமாக ஆதரிக்கிறேன்.

" இந்த ராஜ்யத்தில் மின்சார வினியோகம் ஒரேமாதிரியாக நடக்க வேண்டும், ஒரே விலைக்கு நியாயமாக இந்த ராஜ்யம் பூராவும் கிடைக்க வேண்டுமென்பதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதனால் இரண்டுவித அனுகூலங்கள் ராஜ்ய சர்க்காருக்கு இருக்கின்றன. ஒன்று, மின்சார வினியோகம் நேர்மையாக நடக்கும். இரண்டாவது மத்திய சர்க்காருக்கு போகக்கூடிய வருமானவரி மிச்சமாகும். ஆகவேதான் இதை சர்க்கார் நன்கு பரிசீலனை செய்ய வேண்டும். எல்லாக் கம்பெனிகளையும் சர்க்காரே எடுத்துக்கொண்டுவிட வேண்டுமென்று சட்டம் செய்து, ஒரு வருஷம் மேலும் அதிகாரம் கொடுத்திருக்கிறோம். அரசியல் சட்டம் வேறு திருத்தப்படும் யோசனை இருக்கிறது. அரசியல் சட்டத்திற்குக் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தங்கள் நிறைவேறினாலேயே இந்தக் கம்பெனிகளை சுலபமாக தேசீயமாக்கிவிடலாம்.

" அதோடு தனிப்பட்டவர்களிடமிருக்கும் மின்சார வினியோகக் கம்பெனிகளை எடுத்துக்கொள்ளும்போது சர்க்கார் ஒருவிதமான கொள்கையை அனுசரிப்பது ரொம்பவும் முக்கியமாகும். ஏனென்றால் இப்பொழுது சர்க்கார் என்ன செய்கிறார்கள் என்றால் ஸ்தல-ஸ்தாபனங்களிடமுள்ள கம்பெனிகளைத்தான் முதலில் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இது சரியல்ல. முதலில் அன்னிய முதலாளிகளிடமிருக்கும் கம்பெனிகளைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக நல்ல முறையில் நிர்வாகம் நடக்காத திறமையற்ற முறையில் அதிகக் கட்டணம் மக்களிடமிருந்து வசூலிக்கும் கம்பெனிகளை எடுத்துக்கொண்டுவிட வேண்டும். பிறகுதான் ஸ்தல-ஸ்தாபனங்களிடமுள்ள கம்பெனிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அதோடு எந்தக் கம்பெனிகள் மக்களிடமிருந்து அதிகக் கட்டணம் வசூலித்து வருகிறதோ அந்தக் கம்பெனிகள் விஷயத்தில் சர்க்கார் தலையிட்டு அம்மாதிரி அதிகக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

16th March 1955] [Sri M. Kalyanasundaram]

" மின்சார வினியோகத்தில் இன்றையதினம் பெரிய பாரபட்சம் காட்டப்படுகிறது. அதாவது இதர தொழிற்சாலைகளுக்கு மின்சாரத்தை குறைந்த விலையிலே சப்ளை செய்கிறார்கள். ஆனால் விவசாயத்திற்கு மாத்திரம் இதர தொழிற்சாலைகளுக்கு கொடுப்பதைவிட மிக அதிகமாகவே கொடுக்கிறார்கள். விவசாயத்திற்கு மின்சாரத்தை அதிகம் விஸ்தரிக்க வேண்டுமென்பதில் சர்க்காருக்கு அக்கறை இருக்கிறது. அதை இல்லை யென்கவில்லை. இன்றைக்கு விவசாயத்திற்கு 15 சத விகிதம்தான் மொத்த உற்பத்தியில் மின்சாரம் வினியோகிக்கப்படுகிறது. இருந்தாலும் அந்த 15 சத விகிதம் வினியோகத்தில் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்களே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். விவசாயத்திற்கு ஒரு யூனிட் ஒரு அணா அல்லது ஒண்ணேகால் அணா வுக்குக் கொடுத்தால் இதர இயந்திரத் தொழில்களுக்கு 4½ பைசா அல்லது 5½ பைசாவுக்கு வினியோகிக்கிறார்கள். இப்படிச் செய்வது நியா யமேயில்லை. பொதுமக்களுடைய பணத்தை எடுத்து இயந்திரத் தொழில் களுக்கு சப்ஸிடி வழங்கவேண்டுமென்றால் வேறுவிதமாக வழங்கலாமே தவிர இந்த முறையில் வழங்கக்கூடாதென்று சொல்ல விரும்புகிறேன்.

" ஆனால் ஒரு விஷயம். இயந்திரத் தொழில்களுக்கு ஒரு யூனிட்டுக்கு 4½ பைசா, 5½ பைசாவுக்கு மின்சாரம் சப்ளை செய்யக்கூடாதென்று நான் சொல்லவில்லை. அந்த ரேட்டுக்கு சப்ளை செய்ய அவர்களுக்குக் கட்டி வந்தால் தாராளமாகச் செய்யலாம். ஆனால் அதைப்போலவே விவசாயத் திற்கும் சப்ளை செய்யவேண்டுமே தவிர, இயந்திர தொழில்களுக்கு கொடுக் கும் விலையைவிட மிக அதிகமாக வசூல் செய்வது சரியல்ல என்றுதான் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

" அதோடு இன்னொரு விஷயம். திருச்சியில் இருக்கக்கூடிய ஒரு மின்சார வினியோகக் கம்பெனிக்கு சர்க்கார் ஒரு யூனிட் ·35 அணாவுக்கே மின்சாரத்தைக் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு யூனிட்டை வினி யோகிப்பதற்கு நிர்வாகச் செலவு ·70 அணா ஆகிறது. இது இரண்டையும் சேர்த்துப் பார்த்தாலும் அவர்களுக்கு ஒரு யூனிட்டுக்கு ஒரு அணா ஒரு தம்படி அல்லது இரண்டு தம்படி ஆகும். ஆனால் ஜனங்களிடத்தில் அவர்கள் ஒரு யூனிட்டுக்கு மூன்றே முக்கால் அணா வசூல் செய்து வருகிறார்கள். (ஒரு அங்கத்தினர் :—அதைவிட அதிகமாக வசூல் செய் கிறார்கள்.) இருக்கலாம். என்னிடமுள்ள கணக்கு இரண்டு வருஷத் திற்கு முந்திய கணக்கு. அதன்படி மூன்றே முக்கால் அணாவுக்கே வினி யோகித்து வருகிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும், அவர்களுடைய அடக்கம் ஒன்றே கால் அணா. ஆதலாலே அடக்கத்தைவிட மூன்று மடங்கு அதிகமாக அவர்கள் விலை வைத்து வினியோகிக்கிறார்கள். இப்படி தங்க ளுடைய அடக்க விலையைவிட மூன்று மடங்கு அதிகமாக அவர்கள் வினி யோகிக்க வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது ? அதோடு இவர்கள் மற்ற இயந்திரத் தொழில்களுக்கு எல்லாம் ஒரு யூனிட்டுக்கு ½ அணா வசூலிக்கிறார்கள். ஆனால் அதே கம்பெனியார் விவசாயத்திற்கு ஒரு யூனிட்டுக்கு ஒரு அணா வசூலிக்கிறார்கள். இந்தக் கம்பெனி ரொம்பத் திறமையாகவும், லாபகரமாகவும் நடந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு கம்பெனியாகும்.

" தென்னாற்காடு ஜில்லாவில் இருக்கக்கூடிய ஒரு மின்சார வினியோகக் கம்பெனிக்கு சர்க்கார் ஒரு யூனிட் 5½ பைசா வீதம் கொடுக்கிறார்கள். அந்தக் கம்பெனியின் நிர்வாகம் மிகவும் ஊழல் மிக்கது என்பதற்குச் சான்றாக அவர்களுக்கு நிர்வாகச் செலவு, அதாவது ஒரு யூனிட் மின் சாரத்தை வினியோகிக்க அவர்களுக்கு ஏற்படும் நிர்வாகச் செலவு ½ அணா வாக இருக்கிறது. இம்மாதிரி அதிக நிர்வாகச் செலவு ஆகும் ஊழல் மிக்க ஸ்தாபனங்களையே முதலில் ஒழித்துவிட வேண்டுமென்பது என் அபிப்பிராயம். இவர்கள் இயந்திரத் தொழில்களுக்கு யூனிட் முக்கால் அணாவுக்கு வினியோகிக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் விவசாயத் திற்கு யூனிட் 1¼ அணாவுக்கு வசூலிக்கிறார்கள். இதை எல்லாம் சர்க்கார்

கவனிக்க வேண்டும். இந்தக் கம்பெனிகளை எல்லாம் எடுத்துக்கொள்வதற்கு காலதாமதமானாலும் இவர்கள் வினியோகிக்கின்ற யூனிட்டின் ரேட்டையாவது உடனடியாகக் கட்டுப்படுத்தவேண்டும்.

" அதோடு தற்போது இருக்கிற ரேட்டைக் குறைக்காவிட்டாலும் தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள மின்சார வினியோகக் கம்பெனியார் தங்களுக்கு நஷ்டம் வருவதாகவும் ஆகவே தற்போது உள்ள ரேட்டை அதிகப்படுத்த வேண்டுமென்றும் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அந்த ரேட்டையாவது உயர்த்த நிச்சயமாக அனுமதி கொடுக்கக்கூடாது என்று மாத்திரம் கேட்டுக் கொள்ளுகிறேன்.

" சர்க்கார், விவசாயிகளுக்கு பம்பு செட்டு கொடுப்பதில் முன்னேற்றமடைந்திருப்பதை நான் பார்க்கிறேன். இப்பொழுதிருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்தால் பெரிய வசதி பெற்றவர்களும், பணக்காரர்களும் தான் பம்பு செட்டுகளை வைத்து விவசாயம் செய்வதற்கு இயலுகிறது. சாதாரண சிறு நில விவசாயிகள் பம்பு செட்டு வைத்து விவசாயம் செய்வதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. எற்கெனவே மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் கிராமங்களைப்பற்றி பரவாயில்லை. ஆனால் புதிதாக மின்சார விஸ்தரிப்பு போகக்கூடிய கிராமங்கள் விஷயத்தில் ஹார்ஸ் பவருக்கு 50 ரூபாய் பணம் கட்டவேண்டுமென்று சொல்லி நிர்ப்பந்தப்படுத்தி வசூல் செய்த பிறகுதான் மின்சாரம் வரும். அந்த நிபந்தனையின் பேரில் போதுமான அளவுக்கு பம்பு செட்டுகள் வைத்துக்கொள்வதற்கு குறைந்தபட்சம் 25 விவசாயிகள் மனுச்செய்துகொண்டால்தான் ஒரு கிராமத்திற்கு மின்சாரம் விஸ்தரிப்பது என்ற திட்டம் இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிபந்தனை சர்க்கார் மின்சார விநியோகம் செய்யும் இடங்களிலும் இருக்கிறது, லைசென்சுதார் மின்சார விநியோகம் செய்யும் இடங்களிலும் இருக்கிறது. இம்முறை விவசாயிகளுக்கு நன்மை அளிக்கக்கூடியதாக இல்லை. எந்த ஒரு திட்டமும் லாபகரமாக இருக்கவேண்டுமென்பதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், ஒவ்வொரு மின்சாரக் கம்பம், ஒவ்வொரு அங்குல மின்சாரக் கம்பியும் பணம் எடுத்துக்கொடுக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பது சரியல்ல. ஒட்டு மொத்தமாக ஒரு பிரதேசத்தில் மின்சார விஸ்தரிப்புத் திட்டம் லாபகரமாக இருக்கிறதா லாபகரமாக இல்லையா என்பதைச் சர்க்கார் கவனிக்கவேண்டுமேயொழிய ஒவ்வொரு "எக்ஸ்டன்ஷனும்" லாபமானதாக இருக்கவேண்டுமென்ற கொள்கையை அனுசரிப்பதைப் பார்க்கும்போது, விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டுமென்ற கொள்கையைக் காட்டிலும் லாபம் சம்பாதிக்கவேண்டுமென்பது தான் சர்க்காருக்குப் பிரதானமாக இருக்கிறது என்ற ஒரு முடிவுக்கு வரவேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த விஷயத்தில் லைசென்ஸ் கட்டணம் விவசாயிகளிடமிருந்து பம்பு செட்டுக்காக "அட்வான்ஸ்" ஆக வசூலிக்கப்படுகிறது. இதை நிறுத்தவேண்டும். முடியாவிட்டால் ஒரு ஹார்ஸ் பவருக்கு 10 ரூபாய் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஐம்பது ரூபாய் என்றிருப்பது மிக அதிகம். ஆகவே, அதை பத்து ரூபாய்க்குக் குறைக்கவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

12-30 p.m. " மின்சாரத்தை விவசாயிகளுக்கு மலிவான 'ரேட்'டில் கொடுக்க முடியாவிட்டால் சர்ச் சார்ஜை விவசாயிகள் விஷயத்தில் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இருபது சத விகிதம் சர்ச் சார்ஜ் விவசாயிகளுக்கு விதிக்கப்படுகிறது. அதைக் கைவிடவேண்டும். அதையாவது செய்து விவசாயிகளுக்கு நன்மை அளிக்கவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

" பலகோடி ரூபாய் செலவு செய்து மின்சார நிலையத்தைக் கட்டி மின்சாரத்தை விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்துவிட்டால் மட்டும் போதாது. அங்கு வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களின் நலனையும் மிகவும் அக்கறையோடு கவனிக்கவேண்டும். இந்த இலாகா நடப்பதற்கு முதுகெலும்பு போன்றிருப்பவர்கள் தொழிலாளிகள் என்பதை சர்க்கார் மறுக்கமாட்டார்கள். நேற்றுகூட, கனம் தொழில் மந்திரி சொல்லக்

கூடிய காலத்தில், 'தொழிலாளிகளின் உழைப்பினால் ஏற்படுகின்ற பலன் பூராவையும் அவர்கள் அனுபவிக்கக்கூடிய நிலைமையில் இருக்க வேண்டும்' என்று சொன்னார்கள். நான் அறிந்த மட்டில் தொழிலாளி கள் அவ்வளவு சுயநலமுள்ளவர்களென்று நான் நினைக்கவில்லை. தொழி லாளிகளுக்கே முழுப் பலனும் கிடைத்துவிடவேண்டுமென்ற நிலைமையில் தொழிலாளிகள் இல்லை. உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைக்க வேண்டுமென்றும், மனிதர்களாக அவர்கள் வாழ்வதற்கும் வேண்டிய உரிமைகள் இருக்கவேண்டுமென்றும்தான் அவர்கள் விரும்புகிறார்கள். இந்தத் தேசம் நன்றாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்தில்தான் நம் நாட்டிலுள்ள தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அந்த எண்ணத் தில்தான் தொழிற்சங்கங்களும் தங்களுடைய கோரிக்கைகளை வைக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"சர்க்கார் அல்லாத மற்ற தொழிற்சாலைகள் விஷயத்தில் (இண்டஸ்ட் ரியல் டிஸ்ப்யூட் ஆக்ட்) தொழிற் தகராறுச் சட்டம் இருக்கிறது. அதன் மூலம் தொழிலாளிகளுக்கு ஒரு பாதுகாப்பு ஏற்படுகிறது. ஆனால் சர்க் காரால் நிர்வகிக்கப்படுகிற தொழிற்சாலைகள் விஷயத்தில் அந்தப் பாது காப்பும் கிடையாது. அதனால்தான் நம்முடைய சர்க்காருக்கு பொறுப்பு அதிகமாகிறது என்று சொல்ல விரும்புகிறேன். ஆறு வருஷங்கள், ஏழு வருஷங்கள் வேலை செய்தாலுங்கூட வேலை நிரந்தரமாகும் என்ற உத்தர வாதம் இல்லாத நிலையில்—சென்னை நகரத்திலும் சரி, மேட்டூரிலும் சரி— சர்க்கார் இலாகாவில் பெரும்பகுதியானவர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

"சம்பள விகிதங்கள் மிகவும் குறைவு. விவரங்களுக்கு நான் போவ தென்றால் நேரமாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் அதைப்பற்றி அதிகம் பேசுவது அவசியமில்லை என்று நினைக்கிறேன். அதைப்பற்றி பல சந்தர்ப் பங்களில் மந்திரி அவர்களிடத்தில் பேசமுடியுமென்று நினைக்கிறேன். ஆகவே, விவரங்களுக்கு போகவில்லை.

"தொழிற்சங்கத்தைச் சேர்ந்துள்ள மதராஸ் எலெக்ட்ரிஸிடி ஒர்க்கர்ஸ் யூனியன் ஒரு மெமொராண்டத்தை என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். அது இப்பொழுது என் கையில் இருக்கிறது. அதில் 19 கோரிக்கைகள் அடங்கியிருக்கின்றன. சோஷலிசம் வந்த பிறகு அடையவேண்டிய கோரிக் கைகள் அல்ல. சாதாரண கோரிக்கைகள்தான். தனிப்பட்டவர்கள் நடத் தும் தொழிற்சாலைகளை நடத்துவதற்குக்கூட சட்டபூர்வமாக நிர்ப்பந்தம் செய்கிறோம். ஆனால், சர்க்காருடைய நிர்வாகத்தின் கீழ் இருக்கும் ஸ்தா பனங்களுக்கு அப்படியில்லை. தொழிலாளர்களுடைய சௌகரியங்களை சர்க் காரே கவனிக்கவேண்டுபவர்களாக இருக்கிறார்கள். அந்த மகஜரை சர்க் காரிடம் கொடுக்க விரும்புகிறேன். கொடுத்தவுடனேயே அதை மந்திரி அவர்கள் பரிசீலனை செய்து இப்பொழுதே பதிலளிக்கவேண்டுமென்று நான் எதிர் பார்க்கவில்லை. இந்தக் கோரிக்கைகள் புதிது அல்ல. டிபார்ட் மெண்டுக்கும் பலமுறை தெரியப்படுத்தி நீண்டகாலமாகத் தகராறில் இருக் கக்கூடிய விஷயம். சில தினங்களுக்கு முன்பு இந்தத் தொழிற் சங்க நிர்வாகிகள் வேலை நிறுத்தம் பண்ணவேண்டுமென்று முடிவு எடுத்த விஷயத்தைச் சொன்னார்கள். "வேலை நிறுத்தம் செய்வது சரியல்ல; மந்திரியவர்களிடத்தில் பேசுவோம்; பிறகு வேண்டுமானால் எது வேண்டு மானாலும் செய்யுங்கள்" என்று நான் அவர்களுக்கு யோசனை சொன் னேன். தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை எழுதி கை யெழுத்திட்டு என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். சட்டசபையில் மந்திரி, அவர்களிடம் அந்த மகஜரைக் கொடுத்து, மந்திரி அவர்களைக் கவனித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று என்னைக் கேட்டுக்கொண் டார்கள். நான் அதற்கு ஒப்புக்கொண்டேன். அவர்களுடைய எண்ணத் தையும் சபையினருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அவர்களுடைய மகஜரின் கடைசி பாராவில் குறிப்பிட்டிருப்பதாவது:

'Once again we beg you, Sir, and the Hon. House and the Government to bestow your favourable consideration to the above as the effective means of rallying the willing co-operation and zealous enthusiasm of the thousands of

workers in this public sector. We on our part wish to take this occasion to reiterate what we have already assured the officers and the Hon. Minister in particular that we will do our best to improve the efficiency of work and fulfilment of the scheme, thus contribute our share to this public utility sector.'

" இந்த மகஜரை நான் இந்தச் சபையின் முன் சமர்ப்பிக்கிறேன்.

(At this stage Sri M. Kalyanasundaram handed over the memorandum to the Joint Secretary to the Legislature.)

" இந்த மகஜரில் கண்டிருக்கக்கூடிய விஷயங்களை சர்க்கார் கூர்ந்து ஆலோசனை செய்து தொழிலாளர்களுக்கு வேண்டிய பரிகாரத்தைத் தேடவேண்டும். மத்திய சர்க்கார் மற்ற தொழில்களுக்கு விசாரணைக் கமிட்டி போட்டிருக்கிறார்கள். சர்க்கார் இலாகாவில் வேலை செய்யும் தொழிலாளர்களுடைய தகராறுகளைத் தீர்க்க அட்ஜுடிகேஷனுக்கு விடமுடியாது என்று தெரியும். உடனே விசாரணைக்கமிட்டியொன்றை நியமித்து அவர்களுடைய குறைகளை ஆராய்ந்து, அந்தச் சிபாரிசுகளின் அடிப்படையிலாவது அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த முறையிலாவது அவர்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்த ஆண்டு நல்ல தோர் முறையில் மான்யத்தைச் சபைமுன் சமர்ப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்."

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" கனம் சபாநாயகர் அவர்களே,

12-40 p.m. " Sir, I have made up my mind to talk in Tamil. The other day I spoke in English against the wishes of so many hon. Members To-day I propose to talk in Tamil. I think you will execuse me."

SRI T. ANANTA PAI :—" May I request the Hon. Minister to speak in English at least when he refers to matters relating to Malabar and South Kanara? "

* THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" Sir. Whenever I have occasion to refer to matters relating to Malabar and South Kanara, I shall speak in English."

SRI T. ANANTA PAI :—" Thank you."

* THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :— " கனம் சபாநாயகர் அவர்களே, இன்று இந்த மான்யத்தை நான் இங்கு கொண்டுவந்தபோது முதன் முதலாக கனம் அங்கத்தினர் ஸ்ரீ நாராயண குருப் அவர்கள், ' மின்சார போர்டை இந்த ராஜ்யத்திற்கு அமைக்கவேண்டாம் என்பதற்கு நான் சொன்ன காரணங்கள் அவருக்கு அவ்வளவு ஆறுதல் அளிக்கக்கூடிய முறையில் இல்லை ' என்று சொன்னார். அதை நான் ஒப்புக்கொள்வதற்கு இல்லை. **This does not concern Malabar though it has been referred to by an hon. Member coming from Malabar.** ஏனென்றால், இந்த விஷயமாக மத்திய சர்க்காருடனும் திட்டக் கமிஷனுடனும் நாம் விவாதித்திருக்கிறோம். மத்திய சர்க்காரின் சட்டப்படி நமது தேசத்திலுள்ள நான்கு ராஜ்யங்களில்தான் மின்சார போர்டுகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. மற்ற எல்லா ராஜ்யங்களும் மின்சார போர்டு அமைப்பதை எதிர்க்கின்றன. இந்த போர்டு அமைப்பதை ஒப்புக்கொண்ட நான்கு ராஜ்யங்களில் ஒரு ராஜ்யம் இம்மாதிரி போர்டு அமைத்தது தவறு என்ற அபிப்பிராயத்திற்குவந்து அதைச் சொல்லிக் கொண்டும் இருக்கிறது. போர்டை ஒழிக்கவேண்டுமென்றும் யோசிக்கிறது.

16th March 1955] [Sri R. Shanmuga Rajeswara Sethupathi]

" அதோடு இன்றைக்கு நடந்த விவாதம் முழுவதையும் கனம் அங்கத்தினர் கேட்டிருந்தால் எவ்வளவு ரசமான விஷயங்களெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்பது தெரியும். கனம் அங்கத்தினர்கள் எழுப்புகின்ற பிரச்னைகளையெல்லாம் தீர்க்கமுடியாதபடி அரசாங்கமே திணறிக்கொண்டிருக்கிறதென்றால் அந்த மின்சார போர்டை அமைத்துவிட்டால் அவர்கள்தான் என்ன செய்துவிடமுடியும் ? மின்சார போர்டினால் தீர்க்கக்கூடிய பிரச்னை இன்றைக்கு நாட்டில் இருக்கவில்லை. பிரச்னை மிகவும் சிக்கலானதாக இருக்கிறது."

Sri N. K. PALANISAMY :— " On a point of order, Sir, மத்திய சர்க்கார் சட்டம் சொல்லுகிறது :

'THE ELECTRICITY (SUPPLY) ACT, 1948.

Chapter I.

(3) This section and sections 3, 4, 57, 58 and 77 and the Sixth Schedule and the table appended to the Seventh Schedule of this Act shall come into force at once.

(4) The remaining provisions of this Act shall come into force in a Province on such date, not later than two years from the coming into force of the sections, Schedule and Table mentioned in sub-section (3), as the Provincial Government, may, by notification in the official Gazette, appoint ;'

" இம்மாதிரி மின்சார போர்டை ஏற்படுத்தவேண்டுமென்று மத்திய சர்க்கார் சட்டம் செய்தபோது ஏன் அதை இந்த சர்க்கார் ஆட்சேபிக்கவில்லை. அவர்கள் சட்டம் செய்தபின் அந்தச் சட்டத்திலுள்ளபடி இந்த போர்டை அமைக்க மறுப்பது சட்டவிரோதமாகாதா ?"

Mr. SPEAKER :—" இது point of order இல்லை."

***The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI** :— " இந்தச் சட்டத்தைச் செய்த மத்திய சர்க்காருடைய அனுமதியைப் பெற்றேதான் மின்சார போர்டை நம் ராஜ்யத்தில் அமைக்காமல் இருக்கிறோம். இது சட்டவிரோதமாகாது. நாங்கள் சொன்ன காரணங்களை வைத்துக் கொண்டு ஒரு வருஷத்திற்கு இந்த போர்டை அமைக்கவேண்டாம் என்பதற்கு மத்தியசர்க்காரிடமிருந்து அனுமதி பெற்றிருக்கிறோம். அடுத்த வருஷமும் இதேமாதிரி போர்டை அமைக்காமல் இருப்பதற்கு அனுமதி கேட்கப்போகிறோம். அதற்கடுத்த வருஷம் அந்தச் சட்டத்தையே பூராவாக கைவிட்டுவிடவேண்டும் என்பதற்கே அனுமதி கேட்டாலும் கேட்போம் என்று நான் சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன். ஆகையால் மத்திய சர்க்காரின் சட்டத்திற்கு அந்நிதாவாக நாங்கள் ஒன்றும் செய்யவில்லை. அவர்கள் அனுமதியோடேயே எல்லாவற்றையும் செய்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் அவ்வளவுதூரம் ஆதூரமாக பேசவேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

" இது மிகவும் சிக்கலான பிரச்னை. இப்பொழுதே ஜனங்களுக்கு வினியோகிக்கப்படுகிற மின்சாரத்திற்கு அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிற தொகை மிகவும் அதிகமானது என பல அங்கத்தினர்கள் குறைகூறுகிறார்கள். நாம் மின்சார போர்டை ஏற்படுத்திவிட்டால் அந்த போர்டு மத்திய சர்க்காருக்கு வருமானவரி கட்டவேண்டிவரும் என்பதையும், அதனால் அவர்கள் ஜனங்களுக்கு வினியோகிக்கக்கூடிய மின்சாரத்திற்காக வசூலிக்கக்கூடிய தொகையை அதிகப்படுத்த நேரிடும் என்பதையும் கனம் அங்கத்தினர்கள் மறந்துவிடக்கூடாது. அதை உணர்ந்தும் அந்த போர்டை அமைக்கவேண்டுமென்று அங்கத்தினர்கள் சொன்னால் எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை.

" அதோடு நம்முடைய ராஜ்யத்தில் நீர்விசையினால் மின்சக்தியை உற்பத்தி செய்யக்கூடிய பிராஜக்டுகள் மிக அதிகம் இருக்கின்றன. அதனால் இப்போதே பலகஷ்டம் ஏற்படுகிறது. ஏனென்றால், விவசாயத்திற்கு

தண்ணீர் மிக அவசியமாக இருக்கிறது. தண்ணீரை நாம் மின்விசை உற்பத்தி செய்வதற்கு அதிகம் உபயோகப்படுத்திக்கொண்டுவிட்டால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக ஒரு விஷயத்தை உங்களுக்கு சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன். கொஞ்சநாட்களுக்கு முன்னால் ஸ்ரீ ஆதித்தன் அவர்கள் சர்க்காருக்கு ஒரு தந்தி அனுப்பியிருந்தார்கள். அதாவது ஒரு இடத்தில் **illegal cultivation** நடைபெறுகிறது, விசை உற்பத்தியினால் அந்த **illegal cultivation** பாதிக்கப்பட்டதால் 'உணவு கேட்கக் கூடிய மக்களின்மேல் கல்லைப்போடாதீர்கள்;' '**People want food; don't throw stone**' என்பதாக ஒரு தந்தி கொடுத்திருந்தார். அங்கு நடப்பதோ **illegal cultivation.** இருந்தும் அவர்களுடைய தலையில் கல்லைப்போடாதீர்கள் என இவர் கேட்டுக்கொண்டார். அங்கு விவசாயம் பழுதாக போகக்கூடாது என்பதற்காக சர்க்காரும் தண்ணீர் கொடுத்தார்கள். நீர்விசையைக்கொண்டு மின்சாரத்தைப் பெருக்கலாம் என்றால் இம்மாதிரியான பல சிக்கலான பிரச்னைகள் எழுகின்றன. இங்கிலாந்தில் மின்சார போர்டு அமைக்கப்பட்டிருக்கிறதே, வேறு நாடுகளில் வேறு விதமாக செய்யப்பட்டிருக்கிறதே, அதேமாதிரி இங்கும் செய்யுங்கள் என்று சொன்னால் அது நம்நாட்டுக்கு எப்படி முடியும்? வெளிநாட்டிலுள்ள பிரின்சிபில்களை அப்படியே காப்பி அடிக்கவேண்டுமென்றால் அது சாத்தியமான காரியமல்ல. நம்முடைய நாட்டு மக்களுடைய பழக்கவழக்கங்கள் தொழில்முறைகள் முதலியவற்றை அனுசரித்தே நாம் பல திட்டங்களை போடவேண்டியவர்களாக இருக்கிறோம். இதை அங்கத்தினரும் உணரவேண்டும்."

Sri M. KALYANASUNDARAM :—" நாங்கள் உணராமல் இல்லை."

* The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள்; நான் உங்களுக்காகச் சொல்லவில்லை; உங்களைப்போல் உணருகின்றவர்களுக்கும் சொல்லவில்லை; உணராதவர்களுக்குத்தான் நான் சொல்லவேண்டியதாயிருக்கிறது.

" மின்சார போர்டை நாங்கள் அமைக்கக்கூடாது என்பதற்குக் காரணம் அந்த போர்டை அமைத்துவிட்டால் சர்க்காருடைய கௌரவம், சர்க்காருக்குள்ள உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் அதிகாரம் ஆகியவைகளெல்லாம் அந்த போர்டினிடம் போய்விடுமே என்பதற்காக நான் எதிர்க்கவில்லை. எல்லா அதிகாரங்களும் எங்கள் கையில் இருக்கவேண்டும் என்பது எங்களுடைய அபிப்பிராயம் அல்ல. பொதுமக்களுக்கு நல்லமுறையில் சேவை செய்யவேண்டும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய வகையில் மின்சாரத்தைப் பூராவாகவும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய அபிப்பிராயம் என்று சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். சர்க்காரிடம் இந்த அதிகாரம் இருக்கும்போதே இன்னும் பல இடங்களில் பலவிதமான நன்மைகளை செய்யமுடியாதவர்களாக இருக்கிறோம். போர்டினிடம் இந்த அதிகாரத்தைக் கொடுத்துவிட்டால் பிறகு ஜனங்களுடைய சௌகரியம் எப்படி கவனிக்கப்படும் என்று நான் சொல்வதற்கில்லை. அந்தச் சட்டத்தில் போர்டை அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறதே, அதன்படி ஏன் அமைக்கவில்லை, சட்டப்படி நடக்கவேண்டாமா என்று அங்கத்தினர் கேட்டால் என்ன பதில் சொல்லுவது என்று எனக்குத் தெரியவில்லை. சட்டம் யாருக்காக இருக்கிறது? சட்டம் மனிதர்களுக்காக ஏற்பட்டிருக்கிறதே தவிர, மனிதர்கள் சட்டத்திற்காக சிருஷ்டிக்கப்படவில்லை. மனிதர்களுடைய சௌகரியத்தை உத்தேசித்து மனிதர்களுக்கு வேண்டிய சௌகரியம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறவர்கள்கூடி ஆலோசித்து ஒரு சில விதிகளை சட்டமாக இயற்றுகிறார்கள். மனிதர்கள் தங்களுடைய சௌகரியத்தையும், சமுதாயத்தின் பொது சௌகரியத்தையும் உத்தேசித்தே அந்த சட்டத்தை பின்பற்றுகிறார்கள். ஆகவே சட்டம் மனிதர்களுக்காகவே படைக்கப்பட்டிருக்கிறதே தவிர, சட்டத்திற்காக மனிதர்கள் சிருஷ்டிக்கப்படவில்லை என்கிற கருத்தை நான் வெளியிட்டால் எல்லா மக்களும் என்னுடைய கருத்தை நிச்சயமாக ஆதரிப்பார்கள்.

16th March 1955] [Sri R. Shanmuga Rajeswara Sethupathi]

" நாம் நம்முடைய அறிவையெல்லாம் உபயோகப்படுத்தி மக்களுக்கு நல்வாழ்வு கொடுப்பதற்குத் தகுந்த முறையில் பல சட்டங்களை இயற்றி இருக்கிறோம். காலப்போக்கில் நாம் இயற்றியுள்ள எந்த ஒரு சட்டத்தினாலாவது நன்மையைக் காட்டிலும் தீமை ஏற்படுகிறது என்று தெரிந்தால் அதை நாம் மாற்றி திருத்தி அமைத்துவருகிறோம். ஆகவே ஒரு சட்டத்தை மத்தியசர்க்கார் கொண்டுவந்துவிட்டால் அதனால் ஜனங்களுக்கு நன்மை ஏற்படுமா ஏற்படாதா என்பதை பரிசீலிக்காமலேயே அதை அப்படியே பின்பற்றவேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொல்வது சரியல்ல. அவர்களுடைய சட்டப்படி மின்சார போர்டை அமைப்பதில் மக்களுக்கு அதிக நன்மை ஏற்படாது. அவ்வாறு அமைக்காமல் மின்சார திட்டங்கள் சர்க்காரிடமே இருந்தால் ஜனங்களுக்கு அதிக நன்மையைச் செய்யமுடியும் என்று சர்க்கார் கருதுவதாலேயே இந்த போர்டை அமைப்பதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. ஆகவே இதற்காக அரசாங்கத்தை குறைகூறிப் பயன் இல்லை.

" ஸ்ரீ கோபாலன் யுன்னி மலையாளத்தில் பேசிவிட்டார்கள். பொதுவாக அவர்கள் ஸ்ரீ குருப் கூறியவற்றையே ஆதரித்துப் பேசியிருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். என்றாலும் அவர்கள் மலையாளத்தில் பேசியதால் எனக்கு ஒன்றும் புரியவில்லை. முக்கியமாக ஏதாவது குறைபாடிருந்தால் அவர் எனக்கு புரியக்கூடியமுறையில் என்னிடம் தனித்து வந்து எடுத்துச்சொன்னால்தான் அவற்றை என்னால் நீக்கமுடியும். ஆகவே அவர் கூறிய விஷயங்களை எனக்கு புரியக்கூடிய வகையில் சொல்வார் என்று நினைக்கிறேன்.

" பெரும்பாலான அங்கத்தினர்கள் எழுப்பிய பொதுவான விஷயங்களைப் பற்றி முதலில் சொல்லிவிடுகிறேன். சர்சார்ஜைப்பற்றி பேசுகின்றபோது 'யுத்தகால சர்சார்ஜ்' என்று அதில் போட்டிருப்பதினால் யுத்தம்தான் முடிந்துவிட்டதே, யுத்தகால சர்சார்ஜை இன்னும் ஏன் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள், அதை ஏன் எடுத்துவிடக்கூடாது ? என்று கேட்கிறார்கள். யுத்தம் முடிந்துவிட்டது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் யுத்தகாலத்தில் இருந்த நெருக்கடியைவிட இப்பொழுது இன்னும் அதிகமான நெருக்கடி இருந்துகொண்டே இருக்கிறது என்பதையும், விலைவாசிகள் இறங்கவே இல்லையென்பதையும் கனம் அங்கத்தினர்கள் ஒப்புகொள்வார்கள் என்று நம்புகிறேன்."

Sri M. KALYANASUNDARAM :—" தொழிலாளர்களுடைய சம்பளம், பஞ்சப்படி ஆகியவற்றை நிர்ணயிக்கும்போதும் இந்த உண்மை கருத்தில் வைத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்."

***The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI** :—" அது வேறு விஷயம் ; அது நிதி மந்திரியைக் கேட்கவேண்டிய விஷயம். நான் சொல்வதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா இல்லையா ?"

Sri M. KALYANASUNDARAM :—" ஒப்புக்கொள்ளுகிறோம்."

The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" ஆகவேதான் யுத்தகாலத்தில் இருந்த நெருக்கடியைவிட இப்பொழுது நெருக்கடி அதிகமாகவே இருப்பதாலும், விலைவாசிகள் இறங்காமலே இருப்பதாலும் யுத்தகால சர்சார்ஜை நீக்கமுடியாமல் இருக்கிறது. யுத்தகால சர்சார்ஜை எடுத்துவிடவேண்டுமென்று சொன்னால் அதனால் ஏற்படுகின்ற நஷ்டத்தினால், வரவுசெலவு திட்டத்தில் விழும் துண்டு அதிகரிக்காமல் இருக்க வேறுவழியில் சரிக்கட்டியாகவேண்டும். எந்த வழியில் சரிக்கட்டலாம் என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டால் நான் சர்சார்ஜை எடுத்துவிடத் தயாராய் இருக்கிறேன்.

" ஸ்ரீ கே. வி. ராமசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஒருவகையில் குறைக்கவேண்டுமென்று சொன்னால் மற்றொரு வகையில் வருமானத்தை எப்படி அதிகப்படுத்துவது என்று சொல்லும்பட்சத்தில் அந்த குறைக்கும்

யோசனையை பரிசீலிக்க அரசாங்கம் ஆட்சேபிக்காது. ஆனால் பல அங்கத்தினர்கள் குறைப்பதற்கு வழி சொல்லுகிறார்களே தவிர வருமானத்தை சரிக்கட்ட வேறு உபாயம் எதையும் சொல்லவில்லை."

SRI M. KALYANASUNDARAM :—" நீங்கள் வருமானத்தை அதிகப்படுத்த வரி போட்டுப்பாருங்கள் ; நாங்கள் குறைப்பதற்கு சர்க்காருக்கு யோசனை சொல்லிக்கொண்டே இருக்கிறோம்."

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" எந்தெந்த இடங்களில் மக்களிடமிருந்து வாங்கப்படும் பணத்தின் அளவை குறைக்கவேண்டுமென்று அங்கத்தினர்கள் சொல்லுகிறார்களோ, அவர்களே அதனால் ஏற்படுகின்ற பணக்குறைவை எந்தெந்த இனங்களில் அதிகப்படுத்தலாம் என்று சொல்லிவிட்டாலும் அவ்விஷயத்தை உடனடியாக கவனிப்பதற்கு சர்க்காருக்கு சௌகரியமாய் இருக்கும்.

" ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள், போனவருஷம் அவர் கூறிய விஷயங்களை எல்லாம் நான் மறந்துவிட்டதாகச் சொன்னார்கள். நான் மறக்கவே இல்லை. எனக்கு எப்போதும் ஞாபகத்தில் இருந்துகொண்டே இருக்கும். மண்டை உள்ளவரையில் ஞாபகம் இருக்கும். வெளியேபோனாலும் அதைப்பற்றியேதான் நினைத்துக்கொண்டு இருப்பேன். மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதை என்னுடைய ஒரே கொள்கை. ஆகவே அவர்கள் கூறிய விஷயங்களையெல்லாம் கவனித்து எந்தெந்தவகையில் நன்மை செய்யலாமோ அந்தந்தவகையில் நன்மை செய்துகொண்டுவருவேன் என்று அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

" இவ்வருஷக் கணக்குப்படிப் பார்த்தால் சர்சார்ஜ் மூலமாக சர்க்காருக்கு கிடைக்கக்கூடிய வருமானம் 101½ லட்ச ரூபாய் என்று எடுத்துக்கொள்ளலாம். Gross பட்ஜட்டாகிய 589 லட்சத்தில் இந்த 101 சொச்சம் லட்சத்தைக் குறைத்துவிட்டால் மொத்த வசூல் 488 லட்ச ரூபாய்தான். ஆனால் செலவு 520 லட்ச ரூபாய் ; பாக்கி நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. சர்சார்ஜையே எடுத்துவிடவேண்டுமென்றால் அதனால் நமக்கு ஏற்படக்கூடிய நஷ்டம் எவ்வளவு அதிகரிக்கும் என்பதை கனம் அங்கத்தினரே உணர்ந்துகொள்ளவேண்டும். விவசாயிகளுக்கு சலுகை அளிக்க வேண்டும் என்பது சர்க்காருடைய நோக்கம்தான். இயந்திரத்தொழிலுக்கு ஒருவகை கட்டணமும், விவசாயத்திற்கு ஒருவித கட்டணமும் வைக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல.

" விவசாயிகளுக்குச் சில சலுகைகள் கொடுத்திருக்கிறோம். ஆனால் கனம் ஸ்ரீ எம். கலியாணசுந்தரம் அவர்கள் இயந்திரத் தொழில்களுக்கு கொடுக்கப்படும் மின்சாரத்தின் விலையைவிட விவசாயத்திற்கு அதிக விலை வாங்கப்படுகிறதாகச் சொன்னார்கள். அப்படியொன்றும் ஜாஸ்தியில்லை. ' பல்க் ' சப்ளையாக இருந்தால், மலிவாக கொடுக்கமுடியும். ஆனால் விவசாயத்திற்கு லைன் போடுவது, போஸ்ட் நடுவது போன்ற ' காஸ்ட் ஆப் எக்ஸிகியூஷன் ' அதிகப்படுகிறது. அதனால்தான் ஒரு யூனிட்டுக்கு வாங்கக்கூடிய ரேட்டும் கொஞ்சம் அதிகப்படுகிறது. இருந்தாலும் விவசாயத்திற்கு எப்படி மலிவாக சப்ளை செய்ய முடியுமென்பதைப்பற்றி ஆழ்ந்து பரிசீலனை செய்து, அதற்குப் பின்னர் ஒரு முடிவுக்கு வரலாமென்று கருதுகிறேன். இது விஷயத்தில் ஏதாவது செய்ய முடியுமென்றும் எனக்குத் தோன்றுகிறது. ஆகவே என்னால் ஆனதைச் செய்யப் பிரயத்தனப்படுகிறேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

" பிறகு ' 10 பர்சென்ட் ரிடர்ன் ' ஐப் பற்றிப் பேசப்பட்டது. இந்த 10 பர்சென்டில் ஜெனரேஷன் சார்ஜ் 1 பர்சென்ட், டெப்ரீசியேஷன் சார்ஜ் 2·1 பர்சென்ட், ஆபரேஷன் அண்ட் மெயின்டெனன்ஸ் சார்ஜ் 3 பர்சென்ட், பாக்கி 3·9 பர்சென்ட் இன்டரெஸ்ட் ; ஆக மொத்தம் 10 பர்சென்ட் என்று இருக்கிறது. 10 பர்சென்ட் ரிடர்ன் வந்தால்தான் கட்டுப்படியாகிறது. இதுதான் 10 பர்சென்டினுடைய தன்மை.

"கனம் ஸ்ரீ எம் கல்யாணசுந்தரம் அவர்கள் தொழிலாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். அவ்விஷயம் எங்கள் கவனத்தில் இருந்துகொண்டு தான் இருக்கிறது. அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்துகொண்டுதான் வருகிறது. முன்னமேயே எங்களிடத்தில் அநேக மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி ஒரு நல்ல முடிவு செய்யவேண்டுமென நானும் ஆதுரப்பட்டுக்கொண்டிருக்கிறேன். இப்போது அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய மனுவில் உள்ள கோரிக்கைகளை யெல்லாம் நான் இன்னும் விவரமாகப் படிக்கவில்லை. முன்னரே அவர்கள் கொடுத்திருக்கும் கோரிக்கைகள்தான் இதிலும் இருக்குமென்று நினைக்கிறேன். இருந்தாலும் மீண்டும் அதைப் பார்த்து, அதில் இருக்கக்கூடிய சிக்கல்களை நீக்கி அதி சீக்கிரத்தில் அவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வருமென நம்பிக்கையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (ஆரவாரம்.) 12-50 p.m.

"தொழிலாளர்களைப்பற்றி நான் நன்கு உணர்ந்திருக்கிறேன். தம்மிடம் வேலை பார்க்கிறவர்களுக்கு திருப்தி இல்லையென்றால், அந்த வேலை நன்றாக நடக்காது என்பதை அரசாங்கமும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே இப் பிரச்னையை நான் நன்கு பரிசீலனை செய்து உருப்படியான காரியத்தைச் செய்வேன் என்று சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன்.

"நான் இப்போது முதலில் ஒரு அறிக்கையைப் படித்தேன். அதிலே நாட்டிலே இவ்வளவு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் இதுமாதிரி என்னென்ன செய்யவேண்டுமென்ற புள்ளி விவரங்களைக் கொடுத்தேன். இதை கனம் ஸ்ரீ குரூப் அவர்கள் நான் செய்துவிட்டதைக் குறித்து தம்பட்டம் அடித்துக்கொள்வதாக நினைத்துவிட்டார்கள். அப்படி இல்லவே இல்லை; நான் தம்பட்டம் அடித்துக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. நாம் செய்யவேண்டிய வேலைகளைப் பார்த்தால் அது பிரும்மாண்டமாக இருக்கிறது. சாதாரணமாக, கல்வியிலே 'கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு' என்று ஒரு பழமொழிச் சொல்லுவார்கள். அதைப்போல் நாம் இதுவரை செய்திருப்பதையும், இந்த நாட்டின் தேவையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் செய்யவேண்டியவைகள் எவ்வளவோ இருக்கின்றன என்பது எங்களுக்கே தெரிகிறது. ஆகவே பெரிதாக எதோ செய்துவிட்டதாக வீராப்புப் பேசிக்கொள்ளக்கூடிய நிலைமையில் நான் இல்லை. அப்படிப்பட்ட என்னைப் பார்த்து, ஸ்ரீ குரூப் அவர்கள் வீராப்புப் பேசுகிறேன் என்று சொல்வது கொஞ்சங்கூட சரியல்ல. மிகக் குறைவான காரியங்களே செய்யப்பட்டிருக்கின்றன என்று நான் சொன்னதை உணராது நான் வீராப்புப் பேசுவதாக அவர் சொல்வதைக் காட்டிலும், அவர் என்னைப்பற்றி உணராது பேசுவது குறித்துத்தான் நான் வருத்தப்பட வேண்டி யிருக்கிறது."

* SRI M. NARAYANA KURUP :—"I did not make any personal reference. I meant ony the Government."

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—"He said, 'we need not feel complacent, and I am only explaining that.'

"உலகம் இன்று எப்படி முன்னேறிக்கொண்டிருக்கிறது, அதில் நம் நாடு எந்த இடத்தில் இருக்கிறது என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். நம் நாட்டை மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் எங்கோ இருக்கிறோம். அதை நான் மறக்கவில்லை. நம் நாட்டை இன்னும் எவ்வளவோ முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதும் உண்மை.

"இப்போது நாம் செய்திருப்பவையெல்லாம் முன்னேற்றத்தின் ஒரு பகுதியேயாகும். அதை நன்கு உணர்ந்திருக்கக்கூடிய நான் எதோ பெரிய காரியங்களைச் செய்துவிட்டதாக வீராப்புப் பேசிக்கொள்ளுகிறேன் என்று சொல்வது தவறு. நான் மமதை கொள்ளவில்லை; நான் அகங்காரம் கொள்ளவில்லை. செய்யவேண்டிய வேலைகள் இன்னும் ரொம்ப

இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். எங்களுக்கு பொறுப்பும் ரொம்ப அதிகம். இதனை நாங்கள் உணராமலில்லை. இத்தனை அங்கத்தினரும் பேசியதற்கு நான் பதில் சொல்லியாகவேண்டும். ஒவ்வொரு அங்கத்தினரும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் பதில் சொல்லக்கூடிய பொறுப்புள்ளவர்களாக இந்தச் சபையில் பேசுகிறார்கள் என்பதை நாங்கள் உணராமலில்லை. உங்களுக்கு மத்தியில் நான் பதில் சொல்லும் போது லட்சக்கணக்கான மக்களுக்கு மத்தியிலே நின்று நான் பதில் சொல்வதாகவே உணருகிறேன். (ஆரவாரம்.) அவ்வளவு தூரம் அறிவு படைக்காமலா நாங்கள் இருக்கிறோம்? அப்படி இருக்கும்போது எங்கள்மேல் குறை சொன்னால் அதை நான் ஒப்புக்கொள்ளவேமாட்டேன். அப்படிக் கூறினால் **Uncharitable Remarks** என்றுதான் சொல்வேன்.

"கனம் ஸ்ரீ சி. ஆர். ராமசாமி அவர்கள் சில சீர்திருத்தங்களைச் செய்யும்படியாகச் சொன்னார்கள். அவற்றை நான் கவனிக்கிறேன். குறிப்பாக, அவர் நம்முடைய நாட்டிலே 'பவர் புரொடக்ஷன்' ரொம்பவும் குறைவாக இருக்கிறது என்றும், குண்டாத் திட்டம் அமுலுக்கு வருவது என்றாலும் ரொம்ப நாளாகுமென்றும், ஆகவே இரண்டாயிரம் மூவாயிரம் கிலோவாட் பவருள்ள ஒரு தர்மல் ஸ்டேஷனை உடனடியாக அமைக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். நமக்கு இன்னும் அதிகமான பவருள்ள தர்மல் ஸ்டேஷன் வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அவர் கூறுகிறபடி அவ்வளவு பெரிய தர்மல் ஸ்டேஷன் ஏற்படுத்த வேண்டுமென்றால், அதற்கு அதிக பணவசதி வேண்டும். ஆனால் நம்மிடம் இப்போது பணவசதி கிடையாது. நெய்வேலித் திட்டம் வந்து விட்டால் அந்தப் பிரச்னையை சுலபமாகத் தீர்த்துவிடலாம். அதற்குள் உடனடியாக 2,000, 3,000 கிலோவாட்டுகள் தர்மல் ஸ்டேஷனை ஏற்படுத்துவது என்றால் முடியாதகாரியம். இரண்டாவதாக, நீராவிமூலம் பவர் சேகரிக்கலாமென்றாலும், அதற்குப் போதுமான நிலக்கரி இப்போது கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இதனால் அத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதென்றால் பலவித கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே இதை உடனடியாக கவனிக்க முடியுமென்று தோன்றவில்லை.

"மேலும், ஸ்ரீ சி. ஆர். ராமசாமி அவர்கள் இன்றைக்கு நமக்குத் தேவைப்படுகின்ற சாமான்களெல்லாம் அயல்நாடுகளிலிருந்து தருவிக்கப்படுவதை நிறுத்தி அவற்றை நம்நாட்டிலேயே உற்பத்தி செய்துகொள்வதற்கு தக்க நடவடிக்கைகள் எடுத்தால், வேண்டிய சாமான்கள் நம்முடைய உபயோகத்திற்கு உடனடியாகக் கிடைக்குமென்றும், அதோடு இந்த நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கிவிடலாமென்றும் சொன்னார்கள். அது வாஸ்தவம். ஆனால் அதற்கும் பணவசதிதான் வேண்டும். எல்லா சாமான்களையும் நாமே உற்பத்தி செய்துகொள்ளவேண்டுமென்றால் ஒரு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்தியாகவேண்டும். அதற்கு வேண்டிய பணத்திற்கு எங்கே போவது? அதோடு லைசென்ஸ் ஏரியாக்களில்கூட இரும்பு போஸ்ட் கிடைக்காத காரணத்தால், பெரும்பாலான இடங்களுக்கு மின்சார விஸ்தரிப்புக் கொடுக்க முடியாமல் இருக்கிறது."

SRI M. KALYANASUNDARAM :—"சவுக்கு மரம் நட்டால் என்ன?"

* THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—"அதைத்தான் சர்க்காரும் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். மரத்தை 'புராசெஸ்' (wood process) செய்துவிட்டால், அது மிக வலுவாக நெடுநாட்களுக்கு உழைக்குமென்று சொல்லப்படுகிறது. மைசூர் ஸ்டேட்டில் கூட இம்மாதிரியாக செய்திருக்கிறார்கள். அதை நான் பார்த்துக்கொண்டு தான் வருகிறேன். அம்மாதிரியாகவே நம் ராஜ்யத்திலும் ஒரு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்றுதான் அரசாங்கம் எண்ணிக்கொண்டிருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன்.

16th March 1955] [Sri R. Shanmuga Rajeswara Sethupathi]

"மேலும் நண்பர் ஸ்ரீ சி. ஆர். ராமசாமி அவர்கள் வீணாக ஆடம்பர விளக்கு அலங்காரங்கள் **Lavish Illumination** போடுவோருக்கு அதிகமாக வரி விதிக்கப்படுகின்றது என்று குறிப்பிட்டார்கள். அதை நான் தவறு என்று சொல்லுவதற்கில்லை."

Sri M. KALYANASUNDARAM :—" நாம் அதையே தடைசெய்தால் என்ன ? "

***The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI** :—" அதைத் தடைசெய்வதற்குப் பதிலாகத்தான் வரியை உயர்த்தியிருக்கிறோம். கனம் ஸ்ரீ சி. ராஜகோபாலாச்சாரியார் காலத்திலேயே இதைச் செய்தார்கள். ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி நாயகர் அவர்கள் அடிக்கடி சொல்லுவதுபோல், இப்படிப்பட்டவர்களுக்கு அதிகமான வரியைப்போட்டு வைத்திருக்கிறோம்.

" அடுத்தபடியாக, ஸ்ரீ ஐ. கே. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் விவசாயிகளுக்கு மின்சாரம் வினியோகிப்பதில் ஏகப்பட்ட சர்சார்ஜ் போடுவதாகச் சொன்னார்கள். அதைப்பற்றி முதலிலேயே சொல்லிவிட்டேன். அரசாங்கம் அதை பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அதைப்பற்றி திட்டவட்டமாக ஒரு முடிவை அறிவிக்க அரசாங்கத்திற்கு போதுமான அவகாசம் வேண்டுமென்று சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன். ஏற்கனவேயே நான் கணக்குக் கொடுத்திருக்கிறேன். எந்த வகையில் விவசாயிகளுக்கு அரசாங்கம் உதவி செய்யலாம் என்பதைப் பரிசீலிக்கிறோம். எப்படியும் விவசாயத்திற்கு பிரதான்யம் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு சலுகை காட்டவேண்டுமென்பதை நான் பூரணமாக ஒப்புக்கொள்ளுகிறேன். நாம் விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டுமென்பதற்காக ஒரு வகையில் பணத்தைக் குறைத்தால், மற்றொரு விதத்தில் சர்க்காருக்கு அப்படிக் குறையும் பணத்தை ஈடுசெய்யவேண்டும். இல்லாவிட்டால் நிதி மந்திரி அவர்களுடைய நிலைமை கஷ்டமாகிவிடும். ஏற்கெனவே இருக்கக்கூடிய பற்றுக் குறையை அது இன்னும் அதிக்கப்படுத்தும். ஆகவே குறைக்கக்கூடிய பணம் அரசாங்கத்திற்கு வேறுவகையில் கிடைக்க வழி செய்துகொண்டே, குறைக்க முற்படவேண்டும். அப்பொழுதே வரவு செலவு கணக்கை சரிக்கட்ட முடியும்.

" ஸ்ரீ ஐ. கே. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் பேசும்போது, சர்க்கார் **permission** கொடுத்தால் ஏதோ சில இடங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்கலாம் என்று சொன்னார்கள். அது என்ன விஷயமென்பதை நான் நன்கு பரிசிலனை செய்தபிறகே பதில் சொல்லமுடியுமென்பதை சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன்.

" அப்புறம் ஸ்ரீ கந்தசாமி கவுண்டர் அவர்கள் பட்ஜெட்டில் 500 கிராமங்களுக்கு 6,000 பம்பு செட்டுகள் என்று சொல்லியிருக்கிறார்கள், அதை 16,000 பம்பு செட்டுகளாக கொடுக்கவேண்டுமென்கிறார். ஒரு வருஷத்தில் நிதானமாக நாம் செய்யக்கூடியது இவ்வளவு, என்பதைத்தான் பட்ஜெட்டில் சொல்லியிருக்கிறோம். பதினாறுயிரம் பம்பு செட்டுகள் கொடுக்கவேண்டுமென்றால், கொடுப்பதற்கு தடையில்லை. ஆனால் அதற்கு முதலில் " **electric power** " இருக்கவேண்டும். இரண்டாவது, போஸ்டு நட்டு, **wire** போட்டு வேலையை செய்யமுடியுமா என்பதை கவனிக்கவேண்டும். முந்தியெல்லாம் 3,000 பம்பு செட்டுகள் **sanction** செய்திருக்கிறோம். இப்போது 6,000 செய்யலாம் என்று வைத்திருக்கிறோம். **horse power** 50 ஆக இருப்பதை 25 ஆக குறைக்கணும் என்று ஒரு அங்கத்தினர் சொன்னார், அதற்கெல்லாவற்றிற்கும் ஒரே பொதுவான பதில்தான்.

" அப்புறம் ஸ்ரீ சின்னசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள். அவர்கள் தொகுதியின் பக்கத்திலே மின்சாரத்தையே பார்த்தது கிடையாது. ஏழு, எட்டு மைல் தொலைவில்தான் விளக்குகள் எரிகிறது என்றார்கள். இது ரொம்ப வருந்தத்தக்க விஷயம்தான். இவ்வளவு பணம் ஒதுக்கி வைத்திருக்கும்போது அங்கெல்லாம் மின்சாரம் பரப்பப்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[Sri R. Shanmuga Rajeswara Sethupathi] [16th March 1955

" அப்புறம் ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்கள் யாரோ ஒருவர் அசெம்பிளிக்கு எதிரில் உண்ணுவிரதம் செய்வதாக சொன்ன விஷயத்தைப்பற்றி சொன்னார்கள். நான் உடனே Electricity department-க்கு சீட்டு அனுப்பியதும் எனக்கு இப்போது ஒரு Note வந்திருக்கிறது. ஏதோ இது விஷயமாக Government-க்கு தகவல் வந்திருப்பதாகவும், அதை பரிசீலனை செய்துகொண்டிருப்பதாகவும் தகவல் வந்திருக்கிறது, கனம் மெம்பர் அவர்கள் அச்சடித்த Notice வைத்திருக்கிறார்கள். ஆனால் அது என் கண்ணில் படவில்லை.

" (மெம்பரை பார்த்து) உங்களுக்கு மட்டும் அச்சடித்த நோட்டீஸ் அனுப்பினார்களா ? எனக்கு கிடைக்கவில்லை.

" இன்னொரு விஷயம். Voluntary loan ஐப் பற்றி சொன்னார்கள். நாங்கள் கட்டாயப்படுத்தி யாரையும் Loan கொடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை. Electricity scheme களை priority படி firstல் வந்தது first, second ல் வந்தது second, third ல் வந்தது third என்று வைத்துவிடுகிறார்கள் depa rtm ent-ல். ஏதாவது கீழே இருக்கக் கூடிய scheme முன்னால் வரவேண்டுமென்றால், அந்த scheme ஏற்படயிருக்கக்கூடிய பகுதியில் . உள்ளவர்கள் loan கொடுத்து சீக்கிரம் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் priority கொடுக்க நாங்கள் உத்தரவு போட்டிருக்கிறோம். அந்த பகுதி மக்களே அந்த work க்கு செலவு செய்கிறேன் என்று சொல்லும்போது தடங்கல் எப்படி சொல்ல முடியும். கட்டாயமாக loan கொடுக்கவேண்டும் என்று யாரையும் நாங்கள் கட்டுப்படுத்தவில்லை. Individual complaints ஏதாவது இருந்தால், நான் பரிசீலனை பண்ணி, உண்மை தெரிந்துதான் பதில் சொல்ல முடியும்.

" அப்புறம் ஸ்ரீ கே. வி. ராமசாமி அவர்கள் சேந்தமங்கலம் பிர்க்கா Electricity ஆச்சு, ஆனால் அதற்கு பக்கத்தில் உள்ள கிராமங்களுக்கு ஒன்றும் செய்யவில்லை, Agricultural pumpsets கொடுக்கவில்லை என்றார்கள். Agricultural pump செட்டுகள் கொடுக்காததற்கு காரணம் என்னவென்று விசாரணை செய்துதான் சொல்லமுடியும். பொதுவாக எந்த அங்கத்தினர் ஆகட்டும், எல்லோரும் ஒரே complaint ஐ தான் சொல்லுகிறார்கள். என்னவென்றால், ' எங்கள் ஊருக்கு இரண்டு மைலுக்கு அங்கிட்டிருந்து Electric line போகிறது, ஆனால் எங்கள் ஊருக்கு வரவில்லை ', என்கிறார்கள். பூராவாக போட்டு முடிகிறவரையிலும், பல இடங்களில் இரண்டு மைலுக்கு பக்கத்தில் ஒரு line போய்க் கொண்டேதான் இருக்கும். இதை யோசிப்பதில்லை, யோசிக்காமல் ' என்ன அநியாயம் பாருங்கள் சார், இரண்டு மைலுக்கு அங்கிட்டு கம்பி போவுது, எங்கள் ஊருக்கு வரவில்லை, 10 வருஷங்களாக பார்த்துக்கொண்டிருக்கிறோம் ' என்று சொல்கிறார்கள். அந்த ஊருக்கு Electricity கொண்டு வந்தால், அதற்கு இரண்டு மைல் தொலைவில் உள்ளவர்கள், இரண்டு மைல் தொலைவில் கம்பி போவது, எங்களுக்கு வரவில்லை என்றுதான் சொல்வார்கள். (சிரிப்பு.) அதனால், இது என்றைக்கும் தீராத தொல்லை. பூரா போட்டால்தான் சமாதானமாகும். நான் பல இடங்களை பார்க்க வேண்டும் என்று அங்கிட்டு செல்லும்போது என்னிடம் இதைப்பற்றி சொல்லுவார்கள். நான் பதிலே சொல்லுவதில்லை. சந்தர்ப்பம் வரும் போது சொல்லிக்கொள்ளலாம் என்று இருந்துவிடுவேன். இன்றைக்கு சொல்லலாம் என்று நினைத்தேன். சொல்லிவிட்டேன்.

" அதற்கப்புறம், ஸ்ரீ ராமசாமி அவர்கள் சொன்னார்கள், அரசியல் முறையை ஒட்டி இந்தமாதிரி விளக்குகள் சாத்தாங்குளத்தில் கொடுக்கப்பட்டிருப்பதாக சொன்னார்கள். அப்படி கொடுத்ததாக எனக்குத் தெரியவில்லை. முதல் மந்திரி அவர்கள் போய் திறந்து வைத்ததாகவும் சொன்னார்கள். முதல் மந்திரி அவர்கள் Periyar project-ஐ திறந்து வைக்க போனதுதான் எனக்குத் தெரியும்.

16th March 1955] [Sri R. Shanmuga Rajeswara Sethupathi]

"சாத்தாங்குளத்தில் முதல் மந்திரி திறந்துவைத்ததுபற்றி ஏதாவது பேப்பரில் வந்திருக்கிறதா, மற்றப்படி 'காக்காய் உட்கார பனம்பழம் விழுந்த' மாதிரி, சாத்தாங்குளத்திற்கு மின்சார **connection sanction** ஆகியதும், **Election** வந்ததும் ஒத்திருக்கும்.

"அப்புறம் ஸ்ரீ அனந்த பாய் பேசினர். அதற்கு நான் **English**-ல் தான் பதில் சொல்லவேண்டும்.

"Now, I come to the points raised by the hon. Member, Sri Ananta Pai. He really made a realistic speech on the floor of this House. While admitting our difficulties he also made mention of many difficulties experienced in South Kanara. He also referred to the stiff rate prevailing in Udipi. In this connexion I shall read the note prepared by the department. 1 p.m.

"The Udipi Licensee's Electrical Undertaking was acquired by the Government from the ex-Udipi Company licensee on 1st June 1951. For the supply given by the Electricity Department in the area after acquisition, the department has been applying, with the approval of the Government, the same rates as were in force under the licensee's tariff immediately before acquisition, together with a surcharge of 50 per cent thereon. This surcharge actually represents a reduction by half of the surcharge of 100 per cent on tariff rate that was being levied by the licensee prior to acquisition of the undertaking. The licensee's rates for supply for lighting, industrial and agricultural purposes in the Udipi area now being continued by the Electricity Department, are annas 6, 2 and 1 per unit, respectively and with the 50 per cent surcharge, these rates work out to annas 9, 3 and 1·5 respectively. No doubt, the rate for lighting is high as compared with the rates in the adjoining hydro-electric areas served by the Government Electricity Department and licensees. This is because the Udipi area is not at present connected to the hydro-grid but is served by power produced in the ex-licensees diesel generating stations at Udipi and Karkala which are now being operated by the Government Electricity Department. The cost of power generated by diesel station is naturally high as compared with cost of production of hydro-power and this accounts for the high rates in the Udipi area. It will, however, be noted that actually, some relief has been given by the Government to consumers in the area after the Government took over the undertaking. Sir, the whole thing will be reviewed and perhaps it may be brough down if we get the Jog power from the Mysore State with whom we have entered into an agreement. This is the position with regard to that. The progress of works on the Mysore side being slow, the desirability of Mysore arranging for their expeditious execution was taken up with that Government, so that this Government could avail the bulk supply without much loss of time after the works on the Madras side have been completed. According to present indications, Mysore expect to complete the works on their side only by October 1956, but have promised to do everything possible to complete them earlier. So the delay is being caused by the Mysore State."

* SRI T. ANANTA PAI :—" I anticipated and I knew that the Hon. Minister would say that it had been reduced from 12 annas to 9 annas. In spite of the overhead expenditure and other expenses, unless it is reduced further there would not be any incentive to make use of electricity. The Jog power would not come before the end of this year and we cannot wait till it comes. So I would request the Government to reconsider the position."

* THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" Yes, we have considered whether any reduction is possible at all and if that is the position as described by the Hon. Member, I shall certainly consider his request.

" He also referred to potential power resources of hydro-electric schemes in Malabar and South Kanara. In this connexion he also made mention of another inter-State project in South Kanara. But I would like to say that we have proposed the Kundah Scheme for our State. This Scheme will serve large areas in our State including Malabar and South Kanara. We are only trying to press our claim that this scheme is a more feasible scheme than other schemes and we want this scheme only. Of course, we have no objection to the Planning Commission sanctioning the Barapuzha Scheme but it should not be at the cost of the Kundah Scheme. As pointed out by the hon. Member, Sri Narayana Kurup, efforts may be made to include the Barapuzha scheme but we, as a Government, are going to press our claim for the inclusion of the Kundah Scheme. It is for the Planning Commission to decide it. We cannot prevent others from pressing their point of view and it is not within our jurisdiction to do so. We say, we want the Kundah Scheme and we stand by it and we feel that that scheme alone will serve the needs of our people. We will lay emphasis only on that point. Of course, as I have already stated we have the least objection to the sanctioning of the Barapuzha scheme but we cannot plead for the inclusion of that scheme. We have to make that position clear. Of course, Dr. Menon and Mr. Kurup may press for the inclusion of that scheme but the Government cannot take any action in the matter."

DR. K. B. MENON :—" It will irrigate about 30,000 acres of land in Malabar."

* THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" Sir, I am only saying that we cannot do anything in the matter and we will not press for the inclusion of this scheme. Let somebody else press it. It is no use discussing a thing which we cannot do. That is what I want to say in respect of this matter."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, in this connexion, I shall just mention one point. If hon. Members of this House press for the inclusion of the Barapuzha Scheme, it is likely to create misunderstandings and difficulties also. I submit that as a

16th March 1955] [Sri C. Subramaniam]

House we should press for the Kundah Scheme and if the Barapuzha Scheme is also sanctioned for the Coorg State it is quite welcome. Therefore, we should not lay emphasis on the Barapuzha Scheme also.''

* SRI V. R. KRISHNA AYYAR :—'' The point appears to have been misunderstood or misapprehended. It is not at the expense of the Kundah Scheme that we should lay emphasis on the Barapuzha Scheme. The Barapuzha Scheme has definitely superior advantages in the matter of providing irrigation and electricity facilities. So, the Madras Government, while pressing the Kundah Scheme should see that the Barapuzha Scheme is also sanctioned as it will shower benefits to certain parts of the State. The Kundah Scheme is a scheme proposed by the Madras State and we will have it and we must have it. But at the same time our Government also should support the inclusion of the Barapuzha Scheme as it will benefit the Madras State also apart from the Coorg State.''

* THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—'' I can also use the same argument and say that the hon. Member has misunderstood my point. What I have stated is that we have no objection to the inclusion of any scheme or for that matter the Barapole Scheme but it should not be at the cost of our Kundah Scheme. We want that scheme and we have got to stand by it. We cannot plead for the inclusion of other schemes. First of all, we must set our house in order before we think of giving charity to others. That is one aspect of the matter. I am not at all detracting the importance or otherwise of the Barapole Scheme but we cannot press for it. I entirely agree, word for word, with what the hon. Deputy Leader of the Opposition has said about the Kundah Scheme and that it should be pressed and executed in our State. So, as far as we are concerned, we are not opposed to any scheme showering benefit on the people of a particular area in the State. But we want to lay emphasis on the importance of the Kundah Scheme. That is the point.

"அதற்கப்புறம் ஸ்ரீ ராமசாமி கண்டர் பம்பு செட்டுகள் பற்றி சொன்னார்கள். அவர்களும் ஸ்ரீ கந்தசாமி கண்டர் சொன்னமாதிரி 6,000 பம்பு செட்டுகள் போதாது, 16,000 வேண்டுமென்று சொன்னார்கள். 6,000 பம்பு செட்டுகள்தான் இந்த வருஷம் செய்யமுடியும் என்று கருதியதால், அதைச் சொல்லியிருக்கிறோம் என்று அவருக்கு பதில் சொல்ல விரும்புகிறேன்.

"அப்புறம் ஸ்ரீ நாகராஜன் அவர்கள் பல பேர்கள் சார்பில் பேசுவதாக சொன்னார்கள். வக்கீல் தொழில் பண்ணுவதால் அந்த பல மெம்பர்களிடம் வக்காலத்து வாங்கியிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. 'இந்த விஷயத்தை மெம்பர் சார்பில் பேசுகிறேன்" என்று சில ஊர்களின் பெயர் ஞாபகம் இல்லாமல், அந்த ஊர் எந்த பகுதியைச் சேர்ந்தது என்று பக்கத்தில் கேட்டுக் கேட்டு பேசினார்கள். (சிரிப்பு.) அவர்கள் ஒரு விஷயத்தைப்பற்றியும் தெளிவாக சொல்லாததால், எனக்கு எந்த விஷயத்திற்கு பதில் சொல்லுவது என்று தெரியவில்லை என்று சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன்."

SRI V. R. NAGARAJAN :—" பல அங்கத்தினர்கள் சார்பாக, பல லட்சக்கணக்கான மக்களின் சார்பாக பேசினேன் என்பது உண்மை. அதற்கு வரிசைப்பிரகாரம் priority list தேவை என்று கேட்டால் சொல்லுகிறேன். செஞ்சி டவுனுக்கு கொடுத்தபிறகு என் ஊருக்கு அப்படியே தெற்கே போய்க்கொண்டிருக்கவேண்டும்."

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" அப்படிச் சொன்னால் எல்லாம் கவனிக்கப்படும் என்று பொதுவாக பதில் சொல்லிவிடுகிறேன்."

" Then, my hon. Friend Sri Nagarajan pleaded on behalf of various interests which are remaining silent. Perhaps they have given him authority to represent their interests. So much so he could not focus his attention to any one interest.

1-10 p.m. " The hon. Member Sri Uppi Sahib spoke about the hydro-electric possibilities in Malabar and other places. As I told hon. Members, we are mainly interested in having the Kundah Scheme implemented. We do not have any necessity for the other schemes. They are all small schemes and they can be taken up for supplementing our power potential later on, if the need is felt.

" The hon. Member Sri M. Palaniyandi spoke about differences in the pay scales, etc., of the employees of the various undertakings which the Government have acquired. I can only tell him that all these things will be looked into. Once we formulate policies with reference to some of the grievances referred to by the hon. the Deputy Leader of the Opposition, we will go into that question also and try to settle it.

" அப்புறம் ஸ்ரீ பார்த்தசாரதி அவர்கள் பேசினார்கள். அவர் பொதுவாக அரசாங்கம் இப்போது செய்துகொண்டு இருக்கிற வேலைகளுக்கு ஆதரவு தெரிவித்துவிட்டு, விவசாயிகளுக்கு Guarantee தொகையை 50 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக குறைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்."

SRI M. KALYANASUNDARAM :—" ரூபாய் 10-க்குக் கொண்டு வரவேண்டும்."

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" 25 ரூபாய்க்கு வந்தபிறகு 10-க்கு வருவோம்.

" பிறகு கனம் ரங்கசாமி ரெட்டியார் அவர்கள் பைபிளிலிருந்து quote செய்தார்கள். God said; 'let there be light and there was light' என்று சொல்லி நான் ஒரு கடவுளின் அம்சம் என்று என்னைப் புகழ்ந்தார்கள். நானும் உங்களைப்போல் ஒரு மனிதன்தான் என்று சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன். நான் 'let there be Electricity' என்று சொன்னால், Electricity எல்லா இடங்களுக்கும் வந்துவிடும் என்று அவர்கள் சொன்னார்கள். அப்படி வருவதாக எனக்குத் தெரியவில்லை. அந்த மாதிரியான தப்பு அபிப்பிராயத்திலும் நான் இல்லை, மற்றபடி அவர்கள் சொன்னார்கள், Loan கொடுக்கப்படும்போது, சில வேலைகளைச் செய்யவேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்தவேண்டுமென்று சொன்னார்கள். Loan கொடுக்கும்போது, இந்த வேலையைச் செய்யவேண்டுமென்று உறுதிமொழி வாங்கிக்கொண்டுதான் கொடுக்கிறோம்.

"அதற்குப் பிறகு, ஸ்ரீ வெங்கடசுப்பா ரெட்டியார் 'மதுராந்தகம் தாலூக்காவுக்கு **Electricity** வரவேண்டும்' என்று சொன்னார்கள். அதுவும் கவனிக்கப்படும் என்று சொல்லுகிறேன். ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள் பேச்சுக்கு, நான் முன்னமேயே பொதுவாக சொன்ன பதில் சரியாக போய்விடும் என்று நினைக்கிறேன். பிறகு கனம் செட்டி நாடு ராஜா அவர்கள் பேசினார்கள். அவர்கள், இந்த **Private Electricity** கம்பெனிகள் அவ்வளவையும் உடனடியாக ஒரேநாளில் எடுத்துவிடவேண்டும், நினைத்தவாறு, ஒவ்வொன்றாக எடுப்பது சரி யில்லை என்றார்கள். அவர்கள் அதற்கு ஒரு வழியும் சொன்னார்கள். அதாவது இந்த கம்பெனிகளை வாங்க பணம் இல்லாத கவலையை போக்க ஒரு தந்திரமும் சொல்லிக்கொடுத்திருக்கிறார்கள். அந்த தந்தி ரத்தை நான் உபயோகப்படுத்த முடியாது. கனம் நிதிமந்திரிதான் உபயோகப்படுத்த முடியும். ராஜா அவர்கள் சொன்னார்கள், நான் **Public loan** வாங்கப்போகிறேன் என்று இந்த அரசாங்கம் சொன்னால், உடனே **Government of India** பார்த்து நான் கொடுக்கிறேன் என்று வந்துவிடுவார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன தந்திரத்தை நிதிமந்திரியிடம் அப்படியே சமர்ப்பித்து விடுகிறேன். ராஜா அவர்கள் சொன்ன சொல்லை அப்படியே நிதி மந்திரியிடம் சொல்லிவிட்டேன். (சிரிப்பு.)

"மற்றப்படி திருப்பத்தூர் தாலூக்காவைப்பற்றி குறிப்பிடும்போது அங்கு வேலை சரியாக நடக்கவில்லை என்று ஒரு அங்கத்தினர் குறிப் பிட்டார். அதற்குக் காரணம் என்னவென்பதை நான் கவனிக்கிறேன். அது ஒரு வரண்ட பிரதேசம் என்பதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். நீர்ப்பாசன வசதி இல்லாத வரண்ட பிரதேசங்களுக்கு எல்லாம் மின் சாரத்தை விஸ்தரிப்பதன் மூலமாகத்தான் அப்பிரதேசங்களை சீர்திருத்த முடியும் என்கிற அபிப்ராயத்தை நான் முன்பே சொல்லி இருக்கிறேன். அதாவது வரண்ட பிரதேசங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரித்தால் மின் சார உதவிகொண்டு பூமிக்குள் இருக்கும் நீரை வெளியே கொண்டு வந்து விவசாயத்திற்கு பயன்படுத்திக்கொள்வதன்மூலம் அப்பிரதேசங்களை செழிப்புள்ளதாக ஆக்கலாம் என்பதுதான் என் அபிப்ராயம். இதைத்தான் செட்டிநாட்டு ராஜா அவர்களும் சொன்னார். உடனடியாக ராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை போன்ற எல்லா வரண்ட பிரதேசங்களுக்கும் மின்சாரத்தைப் பரப்பவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். ஆகவே ராஜா அவர்கள் கூறிய யோசனைகள் அரசாங்கத்தின் அபிப்ராயத்துக்கு ஒத்ததாகவே இருப்பதால் அதை ஆத ரிக்கிறேன்.

"அடுத்தபடியாக ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள் பேசியபோது லைசென்ஸிங் ஏரியாவைப்பற்றி சொன்னார். அந்தப் பிரதேசங்களில் மின்சார சப்ளைக்கு வசூலிக்கப்பட்டு வரும் ரேட்டைக் குறைக்க வேண்டும் என்றும் சொன்னார். அதோடு அங்கிருக்கும் மின்சார இஞ்சினியர்தான் அடிக்கடி போகக்கூடிய ரோடரி கிளப்புக்கு வருகின்றனவர்களுக்கே மின்சாரம் அளிப்பதில் முதல் சலுகை அளிப்பதாகவும், ஏழை விவசாயிகளுக்கு அளிப்பதில்லை என்றும் கூறினார். ரோடரி கிளப்புக்கு அடிக்கடி போகும் இஞ்சினியர் ஸ்ரீ நடேசன்தான். அவர் சர்க்கார் இஞ்சினியர் அல்ல. லைசென்ஸ்தாரர்களுடைய இஞ்சினியர் அவர். ஆகவே, சர்க்காருக்கு அவரைக் கட்டுப்படுத்த அதிகாரம் இல்லை. சர்க்கார் இஞ்சினியராக இருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்திருப்போம். சரியாக நிர்வகிக்கப்படாத கம்பெனிகளை ஒழித்துவிட வேண்டுமென அவர் கூறினார். இம்மாதிரி நிர்வாகத் திறமையற்ற கம்பெனிகளை ஒழித்துக்கட்ட வேண்டு மென்றுதான் அரசாங்கத்தினுடைய எண்ணமும். இம்மாதிரியானவர் களுக்கு கனம் எதிர்க்கட்சி உப தலைவர் சொன்னமாதிரி லைசென்ஸை கொடுத்திருக்கக்கூடாது. ஏதோ கொடுத்தாய்விட்டது. இனி அதை சீர்திருத்தம் செய்யப் பார்க்கவேண்டுமே தவிர 'ஏன் கொடுத்தீர்கள், ஏன் கொடுத்தீர்கள்' என்று கேட்டுப் பயனில்லை. நடந்து போன காரியத்தை எண்ணி அழுவதில் லாபம் இல்லை.

" கடைசியாக எதிர்க்கட்சி உப தலைவர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்ன விஷயங்களுக்கு வருவோம். தனிப்பட்டவர்களின் நிர்வாகத்திலிருக்கும் மின்சார வினியோகக் கம்பெனிகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளும்போது முதலில் ஊழல் நிறைந்து திறமையற்ற முறையில் நடக்கும் ஸ்தாபனங்களை சர்க்கார் எடுத்துக்கொண்டுவிடவேண்டும் என்றும், பின்னர்தான் ஸ்தல-ஸ்தாபனங்களின் நிர்வாகத்திலுள்ள கம்பெனிகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் சொன்னார். இந்தக் கொள்கையை சர்க்கார் ஒப்புக்கொள்ளுகிறது. ஸ்தல-ஸ்தாபனங்களும் பொது ஸ்தாபனங்களேயாதலால் அவற்றிற்கும் சிறிது லாபம் வரும்படி விட்டு வைத்திருந்தால் மக்களுக்கு அவர்களால் நன்மையைச் செய்யமுடியும். ஆனால் சில ஸ்தல-ஸ்தாபனங்கள் தங்களிடமுள்ள மின்சார வினியோகக் கம்பெனிகளை சர்க்காரே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டதனால்தான் சர்க்கார் அவற்றை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

" லைசென்ஸ்தார்கள் சர்க்காரிடமிருந்து வாங்கும் மின்சாரத்திற்கு எவ்வளவு விலை கொடுக்கிறார்களோ அதைவிடப் பல மடங்கு அதிக விலைக்கு ஜனங்களுக்கு வினியோகித்து கொள்ளை லாபமடிக்கிறார்கள் என்றும், அவர்கள் சர்க்காரிடமிருந்து வாங்கும் மின்சாரத்தை குறைந்த விலைக்குத்தான் விற்கவேண்டும் என்று கட்டுப்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இந்தியன் எலெக்ட்ரிக் ஆக்ட் பிரகாரம் அவர்களுக்கு ரீசனபில் ரிட்டர்ன் இருக்கவேண்டும் என்றும், சர்க்காரிடமிருந்து வாங்கும் விலையோடு நிர்வாகச் செலவையும் சேர்த்து அதற்குமேல் 6 பர்செண்ட் லாபம் வைத்து வினியோகிக்கலாமென குறிப்பிடப்பட்டுவிட்டது. அதற்கு நாம் என்ன செய்யலாம்? ஒவ்வொரு கம்பெனியும் ஆடிட்டர் ஸ்டேட்மென்டைக் காட்டி தாங்கள் விற்கக்கூடிய விலை ரொம்பவும் நியாயமானதென காட்டுகிறார்கள். ஆடிட்டர் ஸ்டேட்மென்டைப்பற்றி நாம் என்ன சொல்லமுடியும்?

" ஊழல் மலிந்துள்ள மின்சார வினியோகக் கம்பெனிகளை ஒழித்துக் கட்ட வேண்டியதுதான். அதை நான் பூரணமாக ஒத்துக்கொள்ளுகிறேன். அதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கமும், பணம் இருந்தால் அரசாங்கம் எல்லா கம்பெனிகளையும் எடுத்துக்கொண்டுவிடும். ஆனால் பணம் இல்லாததுதான் குறை.

" பொதுவாக அங்கத்தினர்கள் சொன்ன விஷயங்கள் எல்லாவற்றையும் ரொம்பவும் கவனமாகக் கேட்டிருக்கிறேன். என்னுடைய பொறுப்பையும் உணர்ந்திருக்கிறேன். அரசாங்கத்தால் எவ்வளவு காரியங்களைச் செய்யமுடியுமோ அவ்வளவு காரியங்களையும் செய்வதற்கு நான் பிரயாசைப்படுவேன் என்பதை மட்டும் சொல்லிக்கொண்டு வெட்டுப் பிரேரணை பிரேரித்தவர்களை வாபஸ் வாங்கிக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

Sri M. NARAYANA KURUP :—" Sir, the Hon. Minister referred to the contract with respect to the Mysore Government. Some of the schemes in Malabar have been postponed on account of the contemplated agreement with the Travancore–Cochin State. I would like to know . . ."

* The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" Sir, our contract with the Travancore–Cochin Government is getting finalised."

Dr. K. B. MENON :—" In view of the assurances given and the considerable progress possibly made in electricity, I withdraw my cut motion."

The cut motion was, by leave, withdrawn.

16th March 1955]

MR. SPEAKER :—" I shall now put the Demand to the vote of the House. The question is—

' That the Government be granted a sum not exceeding Rs. 5,50,71,100 under Demand XXVII—Electricity.' "

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER :—" *Re* Demand XXXVIII—Capital Outlay on Electricity Schemes. May I know whether hon. Member Sri K. C. Gopalan Unni is withdrawing his Cut Motion? " 1-20 p.m.

* SRI K. C. GOPALAN UNNI :—" The Hon. Minister has not given us, during the course of his speech, any hope. May I know once again whether the Hon. Minister holds any hope for Malabar district before the Kundah Scheme is taken up? "

* THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" Yes, we have got lot of schemes. I want the hon. Member to meet me and tell me categorically what are all the schemes he wants to be taken up. Because the hon. Member was talking in Malayalam language, I could not reply to the points raised by him as elaborately as I would wish to."

SRI K. C. GOPALAN UNNI :—" I am not pressing the Cut Motion moved by me."

The Cut Motion moved by hon. Member Sri K. C. Gopalan Unni, was by leave of the House, withdrawn.

MR. SPEAKER :—" I shall now put the main Demand to the vote of the House. The question is—

' That Government be granted a sum not exceeding Rupees 11,78,64,500 under Demand XXXVIII—Capital Outlay on Electricity Schemes.' "

The Demand was put and carried and the Grant was made.

(3) DEMAND XXXII—COMMUNITY DEVELOPMENT PROJECTS.

MR. SPEAKER :—" Before the Hon. Minister moves the Demand for Grant under Community Development Projects, I would like to inform the House that we shall be sitting till 1.45 p.m. to-day. The time allotted for discussion on this Demand has been increased. The time allotted for Demand XIV—Police which will be taken up to-morrow has been reduced from 3 hours to 2 hours. We will take up Police Demand to-morrow at 12 noon and finish it by 2 p.m. Discussion under this Demand for Grant under Community Development Projects will be carried on till 12 noon to-morrow. The House will be sitting to-morrow from 8.30 a.m. to 2 p.m.

" The Hon. Minister for Agriculture will now move the Demand for Grant under Community Development Projects."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Mr. Speaker, on the recommendation of the Governor, I move—

' *That the Government be granted a sum not exceeding Rupees 2,68,84,400 under Demand XXXII—Community Development Projects.*'

" Sir, this Demand covers Community Project Schemes, National Extension Schemes, and Local Development Works. As hon. Members are aware, the Demand for Community Projects is Rs. 1,17,01,900; the Demand for National Extension Service is Rs. 61,28,700; and the Demand for Local Development Works is Rs. 89,95,200.' "

MR. SPEAKER :—" Motion moved—

' That the Government be granted a sum not exceeding Rs. 2,68,84,400 under Demand XXXII—Community Development Projects.' "

SRI M. PALANIYANDI :—" Mr. Speaker, I move—

' *That the allotment of Rs.* 2,68,84,400 *under Demand XXXII Community Development Projects be reduced by Rs.* 100."

MR. SPEAKER :—" Cut Motion moved—

' That the allotment of Rs. 2,68,84,400 under Demand XXXII —Community Development Projects be reduced by Rs. 100.' "

SRI M. PALANIYANDI :—" கனம் சபாநாயகர் அவர்களே, கம்யூனிட்டி ப்ராஜெக்ட்டின் வெட்டுப் பிரேரணையைக்குறித்து பேசும் காலத்தில் நமது மாகாணத்தில் 290 லட்சம் மக்களுடைய பகுதியில் கால் பகுதியில் ஐந்து வருஷ திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது வாஸ்தவம்தான். சென்னை மாகாணத்தில் இப்பொழுது நான்கு கம்யூனிட்டி பிராஜெக்ட்டுகள் இருக்கின்றன. 48 தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நான்கு டெவலப்மெண்ட் வொர்க்ஸ் நடைபெற்று வருகின்றன. எங்களுடைய பகுதிகளில் லோகல் டெவலப்மெண்ட் வேலை நடந்துகொண்டு வருகிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஐந்து வருஷத் திட்டத்தில் கால் பகுதியையாவது முதல் ஐந்து வருஷத்திற்குள் முடித்துவிடவேண்டும் என்று திட்டம் போட்டு ஒரு வருஷத்திற்கு முன்பாகவே நிறைவேற்றி விட்டதாகச் சொல்லப்படுகிறது. இருந்தாலும் மக்களுடைய எண்ணங்கள் அதில் பூர்த்தியாகிவிட்டதா என்று பார்த்தால் அவ்வளவாக பூர்த்தி யாகவில்லை. மக்களுக்குள்ள முக்கியமான தேவைகளை பூர்த்தி செய்து விட்டார்களா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். பணம் அதிகமாக செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அந்தப் பணத்தில் அதிகப்படியான பணம் நிர்வாகச் செலவிற்குத்தான் செலவாகி இருக்கிறது. பணம் பூராவையும் மக்களுடைய உபயோகத் திற்குத்தான் பயன்படுத்தவேண்டும்.

" சாதாரணமாக ஒரு ரோடு போடவேண்டுமென்றால் அதற்கு ரூ. 5,000 செலவாகலாம். அதில் பாதியை, அதாவது ரூ. 2,500-ஐ அரசாங்கம் கொடுக்கவேண்டும் என்றும் கால் பங்கை பஞ்சாயத்து போர்டும், ஜில்லா போர்டும் கொடுக்கவேண்டும் என்றும் கால் பங்கை விவசாயிகள் தங்களுடைய உழைப்பின் மூலமாகவோ அல்லது பணமாகவோ

16th March 1955] [Sri M. Palaniyandi]

கொடுக்கவேண்டும் என்றும் அந்தப் பணத்தை முதலில் டிரஷரியில் கட்டவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். இந்த நிலைமை அங்கு இயங்கி வருகிறது. அதனால் அவைகளை நிறைவேற்றுவதில் காலதாமதமாகிறது. இன்னும் அதிகமாக மக்களை சேர்த்து அவர்கள் உழைத்து ரோடு போடவேண்டும். கால் பங்கு செலுத்தவேண்டும் என்று சொல்வதனால் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் ஒரு வேலையை முடித்துக் கொடுக்க பல ஆண்டுகளாகின்றன. இப்பொழுது மக்கள் உழைக்கத் தயாராக இருக்கிறார்கள். வேலையை ஆரம்பிப்பதற்குள் பஞ்சாயத்து போர்டை பணத்தை ட்ரெஷரியில் கட்டச் சொல்லுகிறார்கள். அதன் பிறகுதான் வேலை செய்யவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். அதனால் பல தொந்தரவுகள் ஏற்படுகின்றன. அங்கங்கே கடன் வாங்குவதாக இருந்தால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. மக்களுடைய ஒத்துழைப்பு இல்லாவிட்டால் வேலை நடக்காது. வேலைகள் தூங்கிக்கொண்டுதானிருக்கும். அப்படி இருக்கக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். கால் பங்கு பணத்தைக் கொடுப்பதற்கு பதிலாக கிராமத்தார்கள் வேலை செய்யத் தயாராக இருக்கிறார்கள். ரோடுகளை போட்டுக்கொடுக்கிறோம் என்றும் சொல்லுகிறார்கள். ஒரு ரூபாய் என்று சொல்லி அவர்களுக்கு எட்டணா கூலி கொடுத்து எட்டணாவுக்கு வேலை வாங்கினால் அவர்கள் அதற்கு ஒத்துழைக்க தயாராக இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு எட்டணா கூலியும் கிடைக்கிறது. எட்டணா வேலையும் சர்க்காருக்குக் கிடைக்கிறது. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் கொஞ்சம் குறைகிறது. இப்படிச் செய்யாமல் கண்ட்ராக்ட்டுக்கு விட்டால் கம்யூனிட்டி ப்ராஜெக்ட் வேலைகளும் லோகல் டெவலப்மெண்ட் வேலைகளும் ஈடேறாது, கண்ட்ராக்டருக்குத்தான் பணம் போய்ச் சேரும். அதனால் நான் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த வேலைகளையெல்லாம் கண்ட்ராக்டுக்கு விடவேண்டாம் என்று. மக்களுக்கு கூலி எட்டணா என்றும் எட்டணாவிற்கு உழைப்பு என்றும் வைத்தால் அவர்கள் மனமுவந்து வேலை செய்ய முன்வருவார்கள். பஞ்சாயத்து போர்ட் பணத்தை கடன் வாங்கி ட்ரெஷரியில் கட்டி அதை கண்ட்ராக்டுக்கு விட்டால், வட்டியும் செலவாகிறது, வேலையும் நடக்காது. கால தாமதம் ஏற்படும். அதனால் பெரிய கஷ்டங்கள் ஏற்படுகின்றன. டால்மியாபுரத்தில் தொழிலாளர்கள் தங்களுடைய ஓய்வு நேரங்களில் ரோடுகள் போடுவதற்கு முன்வந்திருக்கிறார்கள். ரூ. 10,000 செலவில் ரோடு போடுவதாக திட்டமிட்டிருக்கிறார்கள்.

" பத்தாயிரத்திற்கு ரோடு போட திட்டம் போட்டால், சர்க்கார் பணம் கொடுப்பதற்கு அதிக நாள் ஆகிறது. கான்ட்ராக்ட் விட்டால் கான்ட்ரக்டர்கள் ரோடு போட பணம் கடனாக வாங்கி, அதற்கு வட்டி கொடுத்து இந்த ரோட்டு வேலையில் சம்பாதிக்க எண்ணம் கொள்ளுகிறார்கள். அந்த கான்ட்ராக்ட் முறையை தவிர்த்து, மக்களை ஒன்று சேர்த்து, அவர்களுக்கு தேவையான காரியங்கள், ரோடு முதலியன அவர்கள் மூலமாகவே செய்து கொள்ள முடியுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தற்போது கம்யூனிடி ப்ராஜெக்ட் வேலைகளை செய்வதற்கு எப்படி இடங்களை தேர்ந்தெடுக்கிறார்கள் ? நாட்டிலே உற்பத்தி பெருகவேண்டும். இவ்வுற்பத்தி பெருக்கிற்கு சாதகமான இடங்களைத்தான் கம்யூனிடி ப்ராஜெக்ட் வேலைகளுக்கு தேர்ந்தெடுக்கிறார்கள் என்று மந்திரியார் அவர்கள் சொன்னார்கள். இதனால் என்ன தெரிகிறதென்றால், நல்ல தண்ணீருள்ள இடங்களைத் தேர்ந்தெடுத்து நெல் சாகுபடி செய்தால்தான் உற்பத்தி பெருக்குவதாக சர்க்கார் நினைக்கிறார்கள். அப்படி இருக்கக்கூடாது. காடாரம்ப பூமிகளில் கிணறு வெட்டி தண்ணீர் வசதி செய்தும், நீர்ப் பாசன வசதிகள் அங்கு கொண்டுவந்தும், விளைபொருள்களின் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். ஏரிகள் ஏற்படுத்தி, காடாரம்ப நிலங்களை சாகுபடி நிலங்களாக மாற்றவேண்டும். அப்போதுதான் உண்மையில் உற்பத்தியைப் பெருக்குவது ஆகும். நெல் விளையும் பிரதேசத்தைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டுமென்ற எண்ணம் இல்லாமல் சாதாரணமாக ரோடு வசதி அற்ற குடி தண்ணீர் வசதி அற்ற பிற்போக்கான கிராமங்களை இத்திட்ட

வேலைகளுக்காக தேர்ந்தெடுக்கவேண்டும் என்று சொல்லுகிறேன். உடையார்பாளையம், பெரம்பலூர் தாலூகாக்கள் ரொம்ப பிற்போக்கான தாலூகாக்கள். அப்பகுதிகளில் கிராம மக்களுக்கு எவ்விதமான வசதிகளும் கிடையாது. அத் தாலூகாக்களை இத் திட்ட வேலைகளுக்கு தேர்ந்தெடுக்கலாம். இவ்விதமாகவே நம்மாகாணத்தில் எந்த நெற்பகுதிகள் பிற்போக்காக வசதிகள் குறைவாக இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் இக் கம்யூனிடி ப்ராஜெக்ட் திட்டத்தின்கீழ் கொண்டுவரவேண்டும். புல்லம்பாடி கிராமத்தில் குடிதண்ணீர் வசதியே கிடையாது. அங்கு மக்கள் இக் குடிதண்ணீர் வசதி குறைவினால் நரம்புச் சிலந்தி வியாதியால் அநேகர் கஷ்டப்படுகிறார்கள். கலெக்டர் அவர்கள், அந்தப் பகுதியை பார்வையிட்டு அவ்விடத்திற்கு குடிதண்ணீர் வசதி உடனடியாக செய்ய வேண்டுமென்று ஒப்புக்கொண்டார்கள். அதற்காக பத்தாயிரம் ரூபாயில் ஒரு திட்டம் தயார் செய்து, அவ்வூர் பஞ்சாயத்து போர்டு அதற்காக மூவாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறது. சர்க்கார் ஏழாயிரம் ரூபாய் கொடுத்து அங்கு குடிதண்ணீர் திட்டத்தை சீக்கிரத்தில் நிறைவேற்றவேண்டும். பஞ்சாயத்து போர்டோ, சர்க்காரோ, பணம் கொடுப்பதினாலேயே அத் திட்டம் நிறைவேறிவிடாது. புல்லம்பாடி மக்கள் அத் திட்டத்தை தங்கள் உடல் உழைப்பால் நிறைவேற்ற தயாராக இருக்கிறார்கள். சர்க்கார் அத் திட்டத்திற்கான பணத்தைக் கொடுத்து அம் மக்களுக்கு ஊக்கமளித்தால் அத் திட்டம் சீக்கிரத்தில் நிறைவேறுவதுடன், அங்கிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஓரளவுக்கு போக்கும் என்று சர்க்கார் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன். இன்னும் சர்க்கார் நன்றாக யோசனை செய்து ஆங்காங்கு இதில் அக்கரை கொண்ட நண்பர்களை அழைத்து, எப்படி இந்த சமூக நலத் திட்டங்கள், லோகல் **development** திட்டங்கள், ஸ்தல ஸ்தாபன **dovelopment** திட்டங்கள், இவைகளை எல்லாம் உறுவாக்குவது என்று யோசித்து அவ் விடங்களில் மக்களுக்கு லாபகரமாக இருக்கும்படி அத் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த ஆண்டில் 25 லட்ச ரூபாயில் 36 இடங்களில் நேஷனல் எக்ஸ்டன்ஷன் ஸ்கீமை, வேலை செய்யப்போவதாகத் தெரிகிறது. அப்படி வேலை செய்யும்போது, எந்தெந்த இடங்கள் பிற்போக்கானவை, எங்கே மக்கள் ஒத்துழைப்பு அதிகமாக இருக்கிறது என்று தெரிந்து அவ் விடங்களுக்கு அந்த ஸ்கீமை விஸ்தரிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். புல்லம்பாடியில் இவ்வித திட்டங்களை நிறைவேற்ற இரண்டாயிரம் டால்மியாபுரம் தொழிலாளர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.''

1–30 p.m. SRI P. G. KARUTHIRUMAN :—" கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது கனம் மந்திரியார் கொண்டுவந்திருக்கும் மானியத்தை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். இதுவரை நமது சென்னை அரசாங்கத்தில் இதுமாதிரி மானியம் போடுவது இல்லை, பட்ஜெட்டில் சேர்க்கப்படுவதுமில்லை. இந்த மானியத்திற்கு சுமார் மூன்று கோடி ரூபாய் வரை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், இத் திட்டத்திற்கு மக்களிடையே பெருவாரியான ஆதரவும், வரவேற்பும் இருக்கிறதென்பதுதான். அதுமட்டுமல்ல, பணத்தை வைத்துக்கொண்டு மாத்திரம் ஒரு காரியத்தைச் செய்துவிடலாமென்று நினைப்பது தவறு. மக்களின் உடல் உழைப்பு, செயல் ஒத்தாசையும் இருந்தால் எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாக நடத்தலாம் என்பதைக் காட்டுவதே இந்த சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் முக்கியத்துவமும் அடிப்படையுமாகும். 1952-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் இவ்வபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. முதல் வருஷத்தில் கணக்கைப் பார்த்தால் அதிகப் பணம் இத் திட்டத்திற்கு செலவழிக்கப்படவில்லை என்பது தெரியவரும். தவிர, புதிதாக, இத்திட்டம் வந்ததால் மக்களுக்கு இத் திட்டத்தை எப்படி உபயோகித்துக்கொள்வது என்பது தெரியாமலிருந்ததால், இத் திட்டத்தின் நிமித்தம் அதிகப் பணம் செலவாகவில்லை. இப்போது பார்க்கும்போது, மக்களிடத்திலே, இத் திட்ட விஷயமாக ஒரு புது விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் மக்கள், ' இந்த தேசம் நம்முடையது, தங்களுக்கு வேண்டிய காரியங்களை,

16th March 1955] [Sri P. G. Karuthiruman]

தாமே செய்துகொள்ளவேண்டும்' என்ற மனப்பான்மை வளர்ந்துகொண் டிருக்கிறது. இந்த எண்ணம் மக்களிடையே முக்கியத்துவம் பெற்றதற் குரிய பெருமையும், கௌரவமும் கனம் விவசாய இலாகா மந்திரியையே சாரும். அம் மந்திரியார் அவர்கள் இடைவிடாது ஆங்காங்கு tour செய்து இத் திட்டத்தின் முக்கியத்துவத்தை மக்கள் மனதில் படியும்படி செய்திருக்கிறார். அவர் இப்படி கடுமையாக tour செய்வதைக் கண்டு எங்கே அவர் உடல் நலம் குன்றிவிடுகிறதோ என்று பயந்து, நான் அவரை அடிக்கடி டாக்டரிடம் தன் உடலை பரிசோதனை செய்துகொள்ளவேண்டு மென்றுகூடச் சொல்லியிருக்கிறேன். அவ்வளவு சுறுசுறுப்பாகவும் திற மையாகவும், வேகமாகவும் அம்மந்திரியார் அவர்கள், கவனித்து வேலை செய்ததின் காரணமாகத்தான் இன்று இத் திட்டம் தீவிரமாக மாகாண மெங்கும் பரவுகிறது, நடக்கிறது. மற்றும் சர்க்கார் அதிகாரிகள் ஊழி யர்களிடமும் பொதுமக்களிடமும் எப்படி பழகவேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ள இத்திட்டம் நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறது. இது வரையில் ஆளும் ஏகாதிபத்திய வர்க்கமாக இவ்வதிகாரிகள் இருந்ததால் இம்மாதிரியான வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கவில்லை. இப்போது பொது மக்களிடம் நேரடியாக சர்க்கார் அதிகாரிகள் நெருங்கிப் பழக இந்த சமு தாய அபிவிருத்தி திட்டம் ஒரு பாடமாக இருக்கிறது. அதனால் அதிகாரி கள் தேசத்தின் சுபீட்சத்தை மனதில் கொண்டு பொதுமக்களிடம் நெருங் கிப்பழகுகிறார்கள். அப்படி பழகும் அதிகாரிகள் இருக்குமிடங்களிலெல் லாம் இத் திட்டம் நல்ல பலனைக் கொடுத்திருக்கிறது. எங்கே அதிகாரிகள் பழைய ஏகாதிபத்திய மனப்பான்மையுடன் இருக்கிறார்களோ, அங்கெல் லாம் இத் திட்டத்தினால் எவ்வித முன்னேற்றமும் காணமுடியவில்லை. இதை இத்திட்டம் நிறைவேற்றப்பட்டதின் புள்ளி விவரங்களைக்கொண்டு தெரிந்துகொள்ளலாம். இச் சமுதாய அபிவிருத்தி திட்டமானது மிகவும் பலன் தரக்கூடிய உறுதியான ஓர் திட்டமாகும். முதலில் இதன் விவரம் பலருக்குத் தெரியாமல் இருந்தது. இப்போது கிராம மக்கள் இதைப் பற்றி நன்றாக உணர்ந்து பயனடைகிறார்கள். இத் திட்டத்தால் பலருக்குத் தொழில் வசதி ஏற்படுகிறது. ஹரிஜனங்களுக்கு இத் திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டிக்கொள்ள மானியம் அளிக்கப்படுகிறது. மின்சார வசதிகள் கிராமங்களுக்குக் கொண்டுவரப்படுகிறது. மற்றும் இதுபோல் எவ்வளவோ. கிராம மக்களின் வாழ்க்கைக்கு வசதிகள் செய்யப்படுகின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியில் நான் இருக்கும் பகுதியை சமுதாய அபி விருத்தித் திட்டத்தில் சேர்த்திருக்கிறார்கள். கீழ்பவானி Project-ல் இச் சமுதாய அபிவிருத்தி திட்டத்தை அமுலாக்க 66 லக்ஷ ரூபாய் ஒதுக்கப் பட்டு இப்போது 22 லக்ஷம் வரையில் செலவழிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர்களில் சிலர் இதைப்பற்றி சந்தேகித்து இப்படி மந்திரிகள் செய்வது, ஒரு அரசியல் காரணத்திற்காகத்தான் என்று சொல்லுகிறார்கள். என்னுடைய நண்பர்கள்கூட இப்படித்தான் குறைகூறுகிறார்கள். நான் சொல்லுவது என்னவென்றால், இம்மாதிரியாக அபிவிருத்தி திட்டத்தை என் தொகுதியில்தான் நிறைவேற்றுகிறார்கள் என்ற எண்ணம் வேண் டாம். சமுதாய அபிவிருத்தி திட்டம், Block development திட்டம், ஸ்தல ஸ்தாபன development திட்டம், இப்படியாக ஏதாவது ஒரு திட்டம் அமுலில் இல்லாத இடமே கிடையாதென்று சொல்லுகிறேன்."

RAJA MUTHIAH CHETTIYAR OF CHETTINAD :—"இத் திட்டங்கள் பல இடங்களில் இல்லை."

SRI P. G. KARUTHIRUMAN :—"ஸ்தல ஸ்தாபன அபிவிருத்தி திட்டம் எங்கும் இருக்கிறது. ஆங்காங்கு மக்கள் அத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு வேலை செய்கிறார்கள். கனம் அங்கத்தினர் தெரியாமல் அப்படி இல்லை என்று சொல்லுகிறார்கள். Block development திட்டத்தின் கீழ் கோயம்புத்தூருக்கு 3 லக்ஷ ரூபாய் முன்பு ஒதுக்கப்பட்டது. முன்பு இருந்த கலெக்டரும், அதிகாரிகளும் மும்முரமாக வேலை செய்யாததால் அத்தொகை செலவழிக்கப்படாமலும், அத்திட்டத்தை கவனிக்காமலும் வைத்திருந்தார்கள். இப்போது இருக்கும் கலெக்டர் உற்சாகமாக வேலை

[Sri P. G. Karuthiruman] [16th March 1955

செய்வதால் இப்போது ஸ்தல ஸ்தாபன அபிவிருத்திற்காக 15 லக்ஷம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மராமத்து இலாகா மந்திரி சொல்லுவதுபோல், எந்த இடத்திலும் அவ்வபிவிருத்தி திட்டத்தின்கீழ் பணம் செலவழிக்கப் படாத இடமே கிடையாது என்று சொல்லுகிறேன். இப்போது போடப்படும் திட்ட **Estimate** எல்லாம் **P.W.D.** யால் போடப்படுகிறது. இத் திட்ட **Estimate** போடப்பட்டு **approval** ஆகி வருவதற்கு அதிக நாள் ஆகிறது. ஆகவே, இந்த சிகப்பு நாடா வியாதியைத் தீர்க்க வழி காண விவசாய மந்திரி அவர்கள் மார்க்கம் செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளு கிறேன். அது மட்டுமல்ல. இப்போது பொது விவாதத்தின்போது எல் லோரும் பேசினுர்கள், அதாவது ஆவடி காங்கிரசில் **Socialistic pattern of Society** உண்டாக்குவதாக தீர்மானம் போட்டுவிட்டார்கள், அதற்கான நடவடிக்கைகள் இச்சர்க்கார் செய்கிறதா என்று கேட்டார்கள். சமுதாய அபிவிருத்தி திட்டமானது சமதர்ம நோக்குடன் கொண்ட சமூதாயத்தை ஏற்படுத்தவே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறேன். **Socialistic pattern of Society** உண்டாக்குவதென்ருல், பணக்காரர் சொத்தைப் பிடுங்கி மற்றவர்களுக்குக் கொடுப்பதல்ல, மாடமாளிகைகளை எடுத்து, மற்ற மக்களுக்கு கொடுப்பதல்ல, ஏழைமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களை நல்ல நிலைமைக்கு கொண்டுவருவதென்பது தான் அதன் அர்த்தம்.''

Sri S. SWAYAMPRAKASAM :—“ அப்படிச் செய்ய ஏன் பயப் படுகிறீர்கள்.''

Sri P. G. KARUTHIRUMAN :—“ நாங்கள் அப்படி ஒன்றும் பயப் படவில்லை. சமுதாய அபிவிருத்தி திட்டம் என்ருல் எல்லோரும் முன் னேற்றம் அடையவேண்டும், பொருளாதாரத்தில் மேன்மையடையவேண்டு மென்ற பாதையில் முன்னேறுவதுதான் அதன் அடிப்படை நோக்கம். ஸ்தல ஸ்தாபன அபிவிருத்தி திட்டம் 75 பேர் கொண்ட கிராமத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இப்படி விஸ்தரிக்கப்பட்டிருப்பதால் சர்க்கார் அதிகாரிகள் கிராம மக்களிடம் தொடர்புகொள்ள நல்ல சந்தர்ப்பம் இருப் பதுடன் மகாத்மா காந்தி சொன்ன சமுதாய அபிவிருத்தி செய்யவும் அவர் மனதில் கொண்ட ராமராஜ்ஜியத்தை உருவாக்கவும் **Socialistic pattern of Society** உண்டாக்கும் தீர்மானத்தை அமுலில் கொண்டு வரவும் வசதியாக இருக்கிறது. மற்றும் கிராம மக்கள் தங்கள் தொழில் களை வளம்பெற செய்வதற்கு சக்தியைக் கொடுக்கிறதென்று சொல்லிக் கொண்டு கம்பர் இது விஷயமாக சொல்லி இருப்பதை எடுத்துக் காட்டி விட்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

“ கம்பர் ஒரு பாட்டில் சொல்லுகிருர்—

‘ கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்விமுற்ற
வல்லாரு மில்லையவை வல்லரல்லாருமில்லை
யெல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு மெய்தலாலே
யில்லாருமில்லை யுடையாருமில்லை மாதோ.'

ஆகவே இந்த மான்யத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.''

* Sri M. DHARMALINGAM :—“ கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சட்டசபை முன்பாகக் கொண்டுவரப்பட்டிருக்கிற சமுதாய நலத்திட்ட, ஸ்தல ஸ்தாபன நலத்திட்ட மானியத்தை ஆதரித்துப் பேச விரும்புவதோடு, சர்க்கார் இத்துறையில் செய்துவரும் காரியங்களுக்காகவும், அவர்கள் காட்டு கின்ற அக்கறைக்காகவும் நான் நன்றி பாராட்டுகிறேன். இந்த இலாக் காவை நிர்வகித்து வருகின்ற மந்திரி அவர்கள் இது விஷயத்தில் ஆழ்ந்த கவனத்தை அக்கறையோடு செலுத்திவருவதற்காகவும் அவரைப் பாராட்டு கிறேன்.

16th March 1955] [Sri M. Dharmalingam]

"இந்தத் திட்டங்கள் மிகவும் பரந்த நோக்கமுடையன. எல்லாப் பிராந்தியங்களையும், அதுவும் குறிப்பாக பிற்பட்ட பிராந்தியங்கள் எல்லாவற்றையும் முன்னேறச் செய்யவேண்டுமென்ற கருத்தோடு இத்திட்டங்கள் எல்லாம் கொண்டுவரப்படுகின்றன. ஆனால் ஒரு விஷயத்தை மறந்துவிட முடியாது. சர்க்கார் எவ்வளவு லட்சம் ரூபாய் பணத்தை இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கினாலும்கூட மக்களுடைய ஒத்துழைப்பு இல்லையென்றால் அவை வெற்றியடையா. அதோடு சர்க்கார் எவ்வளவு உயர்ந்த எண்ணத்தோடு இந்தத் திட்டங்களைப் போட்டாலும்கூட அதை அமுலுக்குக் கொண்டுவருகிற அதிகாரிகள் அதனை உணர்ந்து நடந்துகொள்ளவில்லையென்றால் பயன் எதுவும் கிடையாது. அதுவும் இன்றையதினம் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் போடப்பட்டிருக்கும் அதிகாரிகளில் பலருக்கு அவற்றில் அக்கறை இல்லையென்று நான் கூற ஆசைப்படுகிறேன். 1-40 p.m.

"உதாரணமாக எங்கள் பிராந்தியத்தில் மக்கள் இந்தத் திட்டங்களைப் பூர்ணமாக நிறைவேற்ற சர்க்காருடன் ஒத்துழைக்க முன்வருகிறார்கள். பணத்தால் உதவி செய்யவும் தயாராக இருக்கிறார்கள். தேகத்தால் உழைக்கவும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் அவர்களுடைய ஒத்துழைப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. குறிப்பாக குடிதண்ணீர் கிணறுகளை வெட்டிக் கொடுக்கவேண்டுமென்றால் செலவாகிற தொகையில் அந்தந்தப் பிராந்தியங்களிலுள்ள மக்கள் மூன்றில் ஒரு பங்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. இதில் அந்தந்த பிராந்தியங்களிலிருந்து ஒரு தலைவர் முன்னுக்கு வந்து பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடத்தவேண்டும். குறிப்பாக எங்கள் பிராந்தியத்தில் ஒருவரிடம் சென்று, 'நீங்கள் எங்களுடைய தலைவராக இருந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும்' என்று கேட்டுக்கொண்டோம் என வைத்துக்கொள்ளுவோம். அவர்களும் அதற்கு சம்மதித்து மக்களுடைய நன்மையை உத்தேசித்து கைப்பணத்தைப் போட்டோ அல்லது வேறெந்தவிதமாகவோ குடிதண்ணீர் வசதியைச் செய்து முடிக்கிறார்கள். ஆனால் அந்த வேலை முடிந்து ஒரு வருஷம் ஆன பிற்பாடும்கூட அவர் கையை விட்டு செலவு செய்த பணத்தை அரசாங்க அதிகாரிகள் திருப்பிக் கொடுக்க தக்க ஏற்பாட்டை செய்ய முன்வருவதில்லை. இப்படி சில இடங்களில் நடந்துவிடுவதால் அரசாங்கத்திற்கு எவ்வளவு பரந்த நோக்கம் இருந்தாலும்கூட அது காரியத்தில் நிறைவேற்றப்படாமல் போய்விடுகிறது. தங்கள் கைப்பணத்தையும் செலவு செய்துவிட்டு, அதுவும் சர்க்காரிடமிருந்து திரும்பி வரவில்லை என்பதினால் மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென்று விரும்புகிறவர்களும்கூட பின்னுக்குப் போய்விடுகிறார்கள். ஆகவே அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அனாவசியமாக எந்த விஷயத்திலும் காலதாமதம் செய்யாமல், ஆங்காங்குள்ள பிரதேச மக்களுடன் ஒத்துழைத்தால்தான் எந்தத் திட்டமும் மிக வெற்றிகரமாக நடக்கும்.

"அதோடுகூட இந்தத் திட்டத்தின் கீழ் நாம் பல அதிகாரிகளை நியமித்திருக்கிறோமே தவிர அவர்கள் மக்களுக்கு நன்மை செய்வதற்காகவே தங்களை அரசாங்கம் நியமித்திருக்கிறதென்று கருதுவதில்லை. குறிப்பாக தேசீய விஸ்தரிப்பு திட்ட பிரதேசத்திலும், எக்ஸ்டன்ஷன் ஆபீசர், இன்ஸ்பெக்டர், வெட்டரினரி டாக்டர், சோஷல் எஜுகேஷன் ஆபீசர், அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், என்பதாக நான்கைந்து உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் செய்கிற வேலை மக்களின் முன்னேற்றத்தை குறித்தது என்பதற்கில்லை. இதனால் மக்களுக்கு குழப்பம்தான். இத்திட்டத்தின்கீழ் கிடைக்கும் கடன் தொகை குறித்த காலத்தில் கிடைப்பது கிடையாது. இதன் பாதி தொகையை அதற்கான அதிகாரிகள் அபகரித்துவிடுகிறார்கள். இது விஷயமாக என்னோடு வந்த ஸ்ரீமான் கோவிந்தசாமி நாயுடுவும் இதைப்பற்றி சொல்லி இருக்கிறார். இதை ஆதரித்து நானும் சொல்லுகிறேன். இது விஷயத்தில் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு இத்தில்லுமுல்லுகளைத் தவிர்க்க தக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

[Sri M. Dharmalingam] [16th March 1955

"குறிப்பாக ஒரு குறிப்பிட்ட வேலையைப்பற்றி ஸ்பெஷல் அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டரிம் போய் கேட்டால், அவர் தாசில்தாரிடம் போய் கேட்கும்படியாகச் சொல்லுகிறார். தாசில்தாரிடம் போய்க் கேட்டால் அது சமுதாய நலத் திட்டப் பிரதேசம். ஆகவே அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டரிடம் போய் கேளுங்கள் என்று சொல்லிவிடுகிறார். இப்படியாக விவசாயிகள் யாரிடம் போய் எதைக் கேட்பது என்று தெரியாமலேயே தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் இந்த சமுதாய நலத் திட்டம், ஸ்தல ஸ்தாபனத் திட்டம் ஆகியவற்றிலும் நாம் ஒதுக்கும் பணத்தில் உத்தியோகஸ்தர்களே பெரும் பகுதியை சாப்பிட்டுவிடுகிறார்கள். இருந்தாலும் அவர்கள் மக்களுடன் ஒத்துழைத்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்யவில்லையென்றால் அரசாங்கத்தின கொள்கையே இவ்விஷயத்தில் ஈடேறுமல் போய்விடும். ஆகவே அமைச்சர் அவர்கள் இவ்விஷயத்தில் அதிகாரிகளுக்கு ஆகும் அனுவசிய செலவை எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ, அவ்வளவு தூரம் குறைப்பதோடு இருக்கக் கூடிய அதிகாரிகள் மக்களுடன் ஒத்துழைத்து அவர்களுடைய ஒத்துழைப்பையும் சரியான முறையில் பெற தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்."

Mr. SPEAKER :—"I now adjourn the House till 8-30 a.m. tomorrow."

The House then adjourned.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

LIBRARY
21 DEC 1955
STATE LEGISLATURE, MADRAS